சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்



# ஆண்டு அறிக்கை
# 2017 - 2018

# ஆண்டு அறிக்கை 2017 – 2018

## பொருளடக்கம்


| எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாரிய இயக்குநர்கள் | 43 |
| 2. | தணிக்கையாளர்களின் அறிக்கை | 44 |
| 3. | இருப்பு நிலைக்குறிப்பு | 51 |
| | வரவு–செலவு கணக்கு | 52 |
| | அட்டவணை | 53 |
| 4. | குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள் | 62 |
| 5. | கணக்குகள் மீதான குறிப்புகள் | 65 |
| 6. | தமிழக அரசின் ஆய்வறிக்கை | 73 |
| 7. | நிதிநிலைச் சுருக்கம் – ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 81 |

# சுயாதீனமான தணிக்கையாளர் அறிக்கை

எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்

எண். 147/1, 2வது மாடி
சுகான்ஸ் சிவகாமி ஸ்கோயர்,
ஜி.என். செட்டி ரோடு,
தி.நகர், சென்னை – 600 017.
தொலைபேசி எண்: 044 – 28156987
மின் அஞ்சல் : mcs@camcr.in

## தணிக்கையாளர் அறிக்கை

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய இயக்குநர்களுக்கு

#### நிதி நிலை மீதான அறிக்கை

1. நாங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளின் நிலவரப்படி இருப்பு நிலைக் குறிப்பினையும், அந்நாளில் முடிவுற்ற ஆண்டின் வரவு மற்றும் செலவுக் கணக்கையும், அதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளையும், சுருக்கமான குறிப்பிடத்தக்க கணக்கு முறைக் கோட்பாடுகளையும் மற்றும் கணக்குகள் மீதான குறிப்புகளையும் கணக்காய்வு செய்து முடித்துள்ளோம்.

#### நிதி நிலை அறிக்கைக்கு நிர்வாகத்தின் பொறுப்பு

2. இந்த நிதிநிலை அறிக்கை தயாரிப்பிற்கு சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாகமே பொறுப்பாகும், இவ்வறிக்கையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய 1978 ஆம் வருட சட்டப்படியும், இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கியல் கோட்பாடுகள், தரநிலைகள் பொருத்தமான கணக்கு வைப்பு தரப்படியும், உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி நிலைமையும், நிதி செயலாக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கு தொடர்பான வடிவமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் உள்கட்டுப்பாடு பராமரித்தல் நிர்வாகத்தின் பொறுப்பில் அடங்கும். தவறாகவோ அல்லது மோசடி காரணமாகவோ இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல் ஏதும் சேர்க்கப்படவில்லை. நிதிநிலை அறிக்கையில் மோசடி மற்றும் பிழை போன்ற இடர் மதிப்பீடு செய்வதற்கு அறிக்கை தயாரிக்கும் போது சூழ்நிலைக்கேற்ப நடைமுறைகள் பின்பற்றி உரியவாறு வடிவமைக்கப்பட்ட தக்க உட்கட்டமைப்பை நிர்வாகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பயனுள்ளதாக இருக்கும் வகையில் நடைமுறைப்படுத்தி உள்ளது..

**தணிக்கையாளர்களின் பொறுப்பு**

3. இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது தணிக்கையை அடிப்படையாக வைத்து கருத்தைத் தெரிவிப்பது எங்களது பொறுப்பாகும். நாங்கள், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிலையத்தின் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தணிக்கையின் தரத்தில் தணிக்கை செய்துள்ளோம். இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை என்று நியாயமாக உறுதியளிக்கும் வகையில் நாங்கள் ஒழுக்கவியல் தேவைக்கேற்ப தணிக்கையைத் திட்டமிட்டு, நடத்தி முடிக்க இந்த தணிக்கைத் தரங்கள் வலியுறுத்துகின்றன.

4. நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கும், வெளிப்படுத்தப்பட்ட விவரங்களுக்கும் தகுந்த ஆதாரங்கள் உள்ளது என்பதை சோதனை அடிப்படையில் பரிசீலனை செய்வதும் தணிக்கையில் அடங்கும். தணிக்கையாளர்களின் தீர்ப்பானது, நடைமுறை தெரிவு சார்ந்து, நிதி நிலை அறிக்கையில் எந்த வித முறைகேடுகளோ, இடையூறுகளோ, ஏமாற்றமோ, பிழையோ இன்றி மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை சார்ந்தது. மேற்படி இடர் அளவிலால், உள்தணிக்கை கட்டுப்பாடு வாரியத்தின் முன்னேற்பாட்டில் நிதிநிலை அறிக்கை, தணிக்கை நடைமுறை சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வாரியத்தின் உள் கட்டுப்பாடு குறித்த பயன்பாட்டின் கருத்தினை வெளிப்படுத்த நோக்கமில்லை. கணக்கு கோட்பாடுகளையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட முக்கிய மதிப்பீடுகளையும் ஆய்வதுடன் ஒட்டு மொத்த நிதிநிலை அறிக்கையின் வெளிப்பாட்டை சீர்தூக்கிப் பார்த்தலும் இத்தணிக்கையில் அடங்கும்.

5. கணக்கியல் விதிகள் மற்றும் தணிக்கை தரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் தணிக்கை அறிக்கைக்கு சேர்ப்பதற்கான விஷயங்களையும் கருத்தில் கொண்டுள்ளோம்.

6. நாங்கள் மேற்கொண்ட தகுதியான தணிக்கை கருத்துகளுக்கு அடிப்படையான, ஏற்ற வகையில் தேவையான அனைத்து தணிக்கை ஆதாரங்களையும் பெற்றுள்ளதாக நம்புகிறோம்.

**ஏ. மானியம்**

1. அட்டவணை–க்யூ–இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் II – 8–அரசிடமிருந்து மானியம் – பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017ம் மாதங்களில் பெற்ற ரூ. 8.97 கோடி (பொறுப்புரிமை மாற்றம் நிதி) நடப்பு நிதி ஆண்டில் கணக்கிடுவது மற்றும் இதே போல் ஒரு திட்டப்பணிக்காக வழங்கப்பட்ட மானியம் வேறொரு திட்டப்பணிக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது ஆகியவை இந்தியக் கணக்காளர் நிலையத்தால் அறிவிக்கப்பட்ட கணக்கியல் நியமம் – 4 இருப்பு நிலைப்பட்டியலுக்கு பிறகு நிகழும் தற்செயல் நிகழ்வுகள் மற்றும் கணக்கியல் நியமம் – 12 அரசு மானியத்தின் கணக்குகளுக்கு இணக்கமற்ற செயலாகும். அதன் விளைவாக அரசு மானியங்கள் தலைப்பின் கீழ் நடப்பு பொறுப்புகள் அட்டவணையில் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் II–1,2,3,4– பெருநகர வளர்ச்சி திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கான கூடுதல் மைய உதவி, நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களுக்கு இந்த நடப்பு ஆண்டு பெறப்பட்ட அரசு மானியம் தொகை ரூ. 158.66கோடி (சென்ற ஆண்டு – ரூ. 438.21 கோடி), பங்குகளுக்குப் பதிலாக அரசு மானியமாக கருதப்படுவது குறித்த இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை (திருத்திய) 12ன் படி, பொறுப்பில் மானியம் அதிகப்படியாகவும் பங்குகள் குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

3. இரண்டாம் சென்னை திட்டத்திற்கும், சென்னை மாநகர நதி பாதுகாப்பு திட்டத்திற்கும் மானியங்கள் பெறப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்குண்டான பணிகள் முடிவடைந்தன. பணிக்குண்டான சொத்துக்களை நடப்புபணியில் சேர்த்து, பெறப்பட்ட மானியத்தை கடன்பாடாக பாவிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் கொள்கை மானியங்களாக கருதும் முறைபற்றி தெளிவாக இல்லை. கணக்கியல் நியமப்படி அரசாங்க மானியங்கள் தனியாக காண்பிக்கப்படுகிறது, அரசாங்க மானியம் பொருத்தவரை இவை திருப்பி செலுத்தப்படுவதில்லை.

## பி) நடப்பு கடன்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் V– 2– மற்ற பொறுப்புகள்– மற்றவை – ஒத்திசைவு ஆகாத மீதி நிலுவை தொகையானது 15 பேரேட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ. 62.19 கோடி (சென்ற ஆண்டு ரூ. 225.03 கோடி – 14 பேரேட்டு) பற்று இருப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் V– 2 – மற்ற பொறுப்புகள் – மற்றவை – சென்னை நகராட்சி கழகத்திடம், சேமிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் பணிக் கொடைக்கு பரிமாற்றம் செய்யப்பட்டத் தொகை ரூ. 20,09,651/– (பேரேட்டு எண் – 5390) மற்றும் ரூ13,18,201/– (பேரேட்டு எண் – 5410) பொது பணித் துறையிலிருந்து பரிமாற்றம் செய்யப்பட்டத் தொகை நீண்ட நாட்களாக கணக்குத் தீர்க்காமலிருப்பதன் விளைவாக கடன்பாட்டுக் கணக்கில் அதிகப் படியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சி) நிலையான சொத்துக்கள்

1. நிலையான சொத்துக்கள் – நடப்பாண்டில் தொடக்க நிலுவைத் தொகையான ரூ.9.68 கோடி, முந்தைய ஆண்டின் இறுதி நிலுவைத் தொகையுடன் ஒத்திசைவு செய்யபடவில்லை ஆகையால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை மேலும் பகுதி அலுவலகத்திலிருந்து தலைமை அலுவலகத்திற்கு குறிப்பேடு பதிவு மூலம் சொத்துகளாக மாற்றம் செய்வதை நிறுவனம் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் – குறிப்பு எண் VI– 1 நிலையான சொத்துக்கள் – 2016–17 மற்றும் 2017–18ஆண்டுகளில் பணிகள் நடைபெற்ற கணக்கில் பரிவர்த்தனை இல்லாத நிலையில் மற்றும் முன்னேற்றம் இல்லாத காரணத்தால், வாரியத்தின் கணக்கியல் கொள்கையின் படி 5% என்ற தற்காலிக விகிதத்தில் தேய்மானம் வழங்கப்படவில்லை., ஆகையால் கணக்குகளில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை.

3. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் – குறிப்பு எண் VI– 5– நிலையான சொத்துக்கள் – சென்னை குடிநீர் வாரியத்தின் உரிமை மாற்றம் செய்யப்படாத சில நிலையான சொத்துக்களின் மீது அதன் உண்மை உரிமையாளர்க்கு நிதி சார் இழப்பீடு வழங்காமல் சில உள்ளாட்சி அமைப்புகள் உரிமை இல்லாமல் பயன்படுத்தியதால் கணக்கில் ஏற்படும் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை. வட்டாச்சியரிடம் (நிலம் மற்றும் உடைமை) உறுதிப்படுத்தகோரியும், அதற்கான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை.

4. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VI– 6– நிலையான சொத்துக்கள் – வறட்சி நிவாரணப் பணிகள் தலைப்பில் உள்ள நிலையான சொத்துக்களின் மதிப்பு ரூ. 121.13 கோடியில்(சென்ற ஆண்டு ரூ. 110.78கோடி) வழக்கொழிந்த சொத்தின் மதிப்பை தள்ளுபடி செய்யாத காரணத்தால் நிலையான சொத்துக்களின் மதிப்பு அதிகமாகவும் செலவினக் கணக்கில் வருவாயைக்காட்டிலும் குறைவாகவும் 31.3.2018 அன்று உள்ளபடி காட்டப்பட்டுள்ளதால் அதற்கீடான தொகை பற்றாக்குறையில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

## டி) பொருள் விவரப் பட்டியல்

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII– 1அ– 31.3.2018 அன்றுள்ளபடி வழக்கொழிந்த பொருட்கள் விவரப்பட்டியலை பகுத்தாய்வது இன்மையால், வழக்கொழிந்த/பயனற்ற இருப்புக்களை கண்டு பிடிக்கும் செயல்முறை இன்மையாலும், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1ஆ– 31.3.2018 தேதியில் (பேரேட்டு எண் – 8240), பண்டகசாலை குறைவு என்ற கணக்கில் ரூ. 1.93 கோடி (பற்று இருப்பு) மற்றும் (பேரேட்டு எண் – 8230) பண்டகச்சாலை மிகுதி என்ற கணக்கில் ரூ. 1.88 கோடி (வரவு இருப்பு) நிலுவை இருப்பை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

3. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 1இ– பண்டகசாலை தனிக் கணக்கிலுள்ள நிலுவை இருப்புத் தொகை ரூ. 5,00,487/– (பேரேட்டு எண் – 8250) தள்ளுபடி செய்யாத காரணத்தால், நடப்புச் சொத்துக்களின் கீழ் பொருட்கள் விவரப்பட்டியலில் அதிகப்படியாகவும், 31.3.2018அன்று முடிவுற்ற தேதியில் வரவு மற்றும் செலவுக் கணக்கில், வரவை விட செலவு அதிகம் என்பதால் அன்றைய தேதியில் மொத்தப் பற்றாக்குறையாக காட்டப்பட்டுள்ளது.

4. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1 ஈ– 31.3.2018ம் தேதியில் பொருட்கள் பட்டியலில் கொடுத்துள்ள சான்றிதழின்படி உள்ள பொருட்கள் இருப்புக்கும் அது சம்பந்தப்பட்ட இருப்பு பேரேட்டுக் கணக்கு எண் 8200 முதல் 8225 வரை உள்ள நிலுவை இருப்புக்கும் இடையில் காணப்படும் மாறுபாட்டை அதற்கென்ற கணக்கில் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

5. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1உ – 31.3.2018ம் தேதியில் பேரேட்டு கணக்கு எண்கள் 8252 மற்றும் 8264 ஆகியவற்றில் பண்டக சாலை மொத்த நிலுவை இருப்புத் தொகையான ரூ. 4.62 இலட்சம் (வரவு இருப்பு) (சென்ற ஆண்டு ரூ. 3.73இலட்சம்) மற்றும் பேரேட்டு கணக்கு எண் 8253 ரூ. 19.43 இலட்சம் (பற்று இருப்பு) ஆகிய நிலுவை இருப்புகளை திரும்பப் பெறாதது / தள்ளுபடி செய்யாதது என்பதால் அதற்கென்ற கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

6. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலின் மேலான குறிப்புகள் – குறிப்பு எண் VII –1உ – (பேரேட்டு எண் – 8262) – அனுப்பப்பட்டு போக்குவரத்திலுள்ள பொருள்களின் மதிப்பு ரூ. 5.22 கோடி (சென்ற ஆண்டு ரூ. 2.78 கோடி), நடப்பாண்டின் வரவு இருப்பாக காட்டுகிறது. கணக்கில் இதன் தாக்கம் இன்னும் கணக்கிடப்படவில்லை.

**இ) தலைமை அலுவலகம்/பகுதி அலுவலக பரிவர்த்தனை**

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 3 – 31–3–2018ம் தேதிப்படி – தலைமை அலுவலகம் / பகுதி அலுவலக பரிவர்த்தனை கணக்கில் காணப்படும் நிகர வரவு இருப்புத் தொகையான ரூ. 139.51 கோடியை (சென்ற ஆண்டு ரூ. 266.82 கோடி) ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

**எப்) வசூல் கட்டுப்பாட்டு கணக்கு**

1. அட்டவணை–க்யூ– நிதி இருப்பு நிலை தகவல் குறிப்பு – குறிப்பு எண் VII– 4 –31.3.2018 அன்றுள்ள தேதிப்படி – வசூல்கட்டுப்பாட்டு கணக்கின் இருப்பு ரூ. 1.10கோடி (சென்ற ஆண்டு ரூ. 2.63கோடி) பயனீடு செய்யப்படாததால், இந்த கணக்கின் மீதான தாக்கத்தை அறிய இயலவில்லை.

**ஜி) வங்கி கணக்கு**

1. 31.3.2018 அன்றைய தேதிப்படி வாரியத்தின் 34 வங்கி கணக்கிலுள்ள மொத்த வரவுத் தொகையான ரூ.580.86 கோடி ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை. மேலும், மேலேயுள்ள பேரேட்டு எண்களுக்கு ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால் வாரியத்தின் வரவு, செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் உள்விளைவுகளை கண்டறிய இயலவில்லை.

2. கனரா வங்கி கணக்கில் வசூலிக்கப்பட்ட ரூ. 252.02 கோடி (பேரேட்டு எண் – 9131) (சென்ற ஆண்டு ரூ. 462.53 கோடி) பற்று இருப்பாக உள்ளது. இதற்கான ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

**எச்) காலவரை வைப்புத் தொகை**

1. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII– 5 – வங்கிகளில் குறைந்த கால வைப்புத்தொகை ரூ. 576.52 கோடி (சென்ற ஆண்டு ரூ. 406.48கோடி) மார்ச் 2018ன் படி ஒத்திசைவு செய்யப்படாததால், கணக்குகளின் மீது அவற்றின் தாக்கத்தை உறுதிப்படுத்த இயலவில்லை.

2. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII– 7-i – 31.3.2018 அன்றுள்ள தேதிப்படி, வங்கிகளில் வைத்துள்ள முதலீடான காலமுறை வைப்புத் தொகை (பேரேட்டு எண் – 9170 மற்றும் 9171)உள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் பணப்பிரிவிலுள்ள பதிவேடுகளிலுள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

3. தலைமை அலுவலகத்தின் வங்கி வட்டி, 26கணக்கியல் நியமத்தோடு ஒத்திசைவு செய்யப்படவில்லை.

## ஐ. கடன்களும் மற்றும் முன்பணங்களும்

1. கணக்கு குறியீட்டு எண்கள் 8600, 8720 மற்றும் 8820ல் உள்ள தொகையான ரூ. 4,11,287/– (சென்ற ஆண்டு ரூ. 6,08,255/–) தொழிலாளர்களுக்கு முன்பணம் இருப்பு தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது.

## ஜே. சேர்ந்துள்ள வட்டி

1. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII– 7 (ii) &7 (iii)– ஒத்திசைவு செய்யப்படாத மீதமுள்ள தொகைக்கான வட்டி அதிகரிப்பு கணக்கு பேரேட்டு எண் 8520, 8523 வரவு இருப்பு ரூ.53.56 கோடியாக (சென்ற ஆண்டு – பேரேட்டு எண் 8520, 8523 – ரூ. 14.93 கோடி) காட்டப் படுகிறது. நிலுவையில் உள்ள சமன் செய்யப்படாத இருப்பு நிலையால் கணக்கில் இதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

## கே. பணியாளர்களுக்கான ஓய்வு காலப் பலன்கள்

1. அட்டவணை–க்யூ– வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு – குறிப்பு V1 & 2ஆ பணியாளர்களின் ஓய்வு காலப் பணப்பலன்கள் 31.03.2018 இல் ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப நல நிதி மற்றும் விடுப்பிற்கான தொகை ஆகியவை கணக்கிடப்பட்டு இயல்பான பொறுப்புகள் ஒதுக்கப்படாததால் கணக்கில் ஏற்படும் தாக்கத்தை கண்டறிய முடியவில்லை. இது பட்டயக் கணக்காளர்கள் அலுவலகம் பிறப்பித்த கணக்கியல் நியமம் 15–ன் படி “பணியாளர் நலன்களுக்கு” இணங்கவில்லை.

2. அட்டவணை–க்யூ–வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு–குறிப்பு எண் V– உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களின் ஓய்வு கால பணப்பலன்கள் – 31.03.2018 இல் ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப நல நிதி மற்றும் விடுப்பிற்கான தொகை ஆகியவை கணக்கிடப்பட்டு இயல்பான பொறுப்புகள் ஒதுக்கப்படாததால் கணக்கில் ஏற்படும் தாக்கத்தை கண்டறிய முடியவில்லை. இது பட்டயக் கணக்காளர்கள் அலுவலகம் பிறப்பித்த கணக்கியல் நியமம் 15ன் படி “பணியாளர் நலன்களுக்கு” இணங்கவில்லை.

## எல்) இதர செய்தி கூறுகள்

1) <u>உள் தணிக்கை :</u> வாரியத்தின் இயக்கத்திற்கு ஏற்ப, உள் தணிக்கை குழு மற்றும் கட்டுப்பாட்டு இணக்கம் இல்லாததால், பொருள் தணிக்கை மற்றும் நிலையான சொத்துக்களின் சரிபார்ப்பு தணிக்கையின் கீழ் இந்தாண்டு மேற்கொள்ளப்படவில்லை.

2) கணக்கு மிச்ச இருப்பு உறுதிப்படுத்துதல் : மூன்றாம் தரப்பு கணக்கு மிச்ச இருப்பு உறுதிப்படுத்தல் மற்றும் ஈடுகட்டுதலுக்கு உட்படாததால், கணக்கில் ஏற்படும் தாக்கம் அறியப்படவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் உள்ள உறுதிப்படுத்திய வைப்புத் தொகை ரூ. 15.76 கோடிகள் இன்றும் பெறப்படவில்லை (குறியீட்டு எண்8920).

   மின்சார வாரியத்திடம் உள்ள வைப்பு நிதிக்கான வட்டி மற்றும் மின்சார செலவுகள் கணக்கியல் நியமம் – 1 தெரிவிப்பு அறிக்கையின்படி ஈடுசெய்யப்பட்டுள்ளது.

3) வசூல் மற்றும் பட்டியலிடலுக்கும் மற்றும் பயன்படுத்தாத நிதிக்கும் உள்ள வேறுபாடு சமன் செய்யாதது பற்றிய குறிப்பு:

ஆண்டு 2012–13ல் கணக்கியல் மென்பொருள் யூனிக்ஸிலிருந்து ஆரக்கலுக்கு மாற்றப்பட்டது மற்றும் பத்து தொகுதிகள் பதினைந்து தொகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. இருப்பிலிருக்கும் வாடிக்கையாளர்கள் 15 தொகுதிகளுக்கு மாற்று பகிர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக வருவாயின் ஒரு பகுதி குறிப்பிட்ட கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது தேதி 30.06.2014ல் எடுக்கப்பட்ட கணக்கு வழக்கில் ரூ.13.10 கோடிகள் நின்றது மற்றும் இதன் விளைவாக இருப்பு நிலைப்பட்டியலில் ரூ.4.46 கோடிகளை காட்டியது (சென்ற ஆண்டு ரூ.4.46 கோடி) பயன்படுத்தப்படாத பணம் மற்றும் வசூலை சரிக்கட்டிய பின் கணக்கு ரூ.78.21 கோடிகளாக இருந்தது (சென்ற ஆண்டு ரூ. 83.37 கோடி) இது தற்காலிக முறையில் செய்யப்பட்டது. மேலும் கணக்கு சமனும் செய்யப்பட்டது. இது தக்க தொகுதி வாரியான பயன்பாட்டாளர் கணக்குடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும்.

4) **கட்டுப்பாடு கணக்குகளின் நிலுவை அறிக்கை :** பொதுவாக கட்டுப்பாடு கணக்குகளிள் நிலுவை சீரமைத்தல் சமசீரில் கட்டுப்பாடு கணக்குகளின் நிலுவை செய்து சீரமைக்கப்படவேண்டும்.

5) வரி பணம் வங்கி கணக்கில் வரவு வைக்கும் பொழுது வரி செலுத்த வேண்டும். ஆனால் நடைமுறையில் இது மாதத் தொடக்கத்தில் செலுத்தப்படுகிறது.

## 7. கருத்து

தகுதி வாய்ந்த கருத்தின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களில் விளைவுகள் தவிர, எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மேலான விளக்கங்களின் அடிப்படையில் எங்கள் கருத்து, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க, இருப்பு நிலையும் வருமானம் மற்றும் செலவுக் கணக்கும் அதன் குறிப்புகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அட்டவணைகளுடன் சேர்ந்து உண்மையான மற்றும் நியாயமானதாக தோன்றுகிறது.

I) இருப்பு நிலைக் குறிப்பு 31.03.2018 அன்று வாரியத்தின் செயல்பாட்டு நிலைமைகளுக்கானது, மற்றும்

ii) வாரியத்தின் வரவு செலவு கணக்கிலுள்ள பற்றாக்குறை (வருமானத்தை விட அதிக செலவு) அன்றைய தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கானதாகும்.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 003061S

– ஒப்பம்––
தி. இரா. சந்திரசேகரன்,
கூட்டாளி
உ.எண் 018137
த.ஆ.அ.எண் :20018137AAAAAR5346

இடம் : சென்னை
நாள் : 16.11.2020

## 2018 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| பங்களிப்பு | எ | 17,92,29,06,480.71 | 16,83,28,08,433.71 |
| அரசுமானியம் | பி | 44,80,02,74,133.53 | 40,82,25,96,320.53 |
| நீண்டகாலக் கடன்கள் | சி | 11,07,69,87,809.00 | 11,37,61,29,329.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | டி | 12,77,09,57,735.04 | 11,70,69,42,802.54 |
| நடப்புப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | இ | 13,52,94,57,732.77 | 10,06,93,21,627.55 |
| **மொத்தம்** | | 1,00,10,05,83,891.05 | 90,80,77,98,513.33 |
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | எப் | 70,54,53,16,543.23 | 66,44,44,44,198.59 |
| நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | ஜி | 15,00,98,39,205.84 | 11,46,90,33,962.68 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 14,54,54,28,141.98 | 12,89,43,20,352.06 |
| **மொத்தம்** | | 1,00,10,05,83,891.05 | 90,80,77,98,513.33 |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். **003061S**

வாரியத்திற்காக

--ஒப்பம்--
க. முத்துக்குமாரசாமி
நிதி இயக்குநர்

--ஒப்பம்--
த.ந. ஹரிஹரன் இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்

--ஒப்பம்--
தி.இரா. சந்திரசேகரன்
கூட்டாளி
உ.எண். 018137
த.ஆ.அ.எண் : 20018137AAAAAR5346

இடம் : சென்னை
நாள் : 16.11.2020

## 2018 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிந்த ஆண்டின் வரவு–செலவு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | எச் | 3,04,40,29,968.07 | 3,22,34,10,674.99 |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | ஐ | 1,76,23,35,744.10 | 1,65,96,09,371.88 |
| அரசு மானியம் | | 3,10,75,78,679.00 | 3,04,88,34,930.00 |
| இதர வருமானம் | ஜே | 85,31,31,013.49 | 95,46,45,713.68 |
| முந்தையகால சரிக்கட்டல் கணக்கு | என் | 5,79,74,219.56 | 14,98,91,686.63 |
| திருப்பி எழுதப்பட்ட ஒதுக்கீடு | | | |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 3,21,19,533.16 | 43,30,702.96 |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 50,12,939.25 | 20,31,138.43 |
| – வரிகள் | | 1,78,68,497.78 | 0.00 |
| வரவை விட செலவு அதிகம் | | 1,65,11,07,789.92 | 1,20,17,60,402.34 |
| **மொத்தம்** | | **10,53,11,58,384.33** | **10,24,45,14,620.91** |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | கே | 5,28,75,18,970.17 | 5,06,39,23,547.73 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | எல் | 1,99,51,47,654.97 | 2,01,38,79,167.10 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | எம் | 9,57,76,631.23 | 8,73,69,002.19 |
| குடிநீர் ஊர்தி வாடகைக் கட்டணங்கள்/ வறட்சி தணிப்புச் செலவுகள் / வெள்ள நிவாரண செலவுகள் | | 1,03,35,19,113.70 | 75,57,79,615.11 |
| தேய்மானம் | | 1,39,15,94,565.26 | 1,54,67,55,386.27 |
| கடன் பணிச் செலவுகள் | ஒ | 72,76,01,449.00 | 76,80,50,718.00 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் ஒதுக்கீடு | | | |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 0.00 | 0.00 |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 0.00 | 0.00 |
| – வரிகள் | | 0.00 | 87,57,184.51 |
| **மொத்தம்** | | **10,53,11,58,384.33** | **10,24,45,14,620.91** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். **003061S**

வாரியத்திற்காக

––ஒப்பம்––
க. முத்துக்குமாரசாமி
நிதி இயக்குநர்

––ஒப்பம்––
த.ந. ஹரிஹரன் இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்

––ஒப்பம்––
தி.இரா. சந்திரசேகரன்
கூட்டாளி
உ.எண். 018137
த.ஆ.அ.எண் : 20018137AAAAAR5346

இடம் : சென்னை
நாள் : 16.11.2020

## அட்டவணைகள்

### அட்டவணை – எ – பங்களிப்பு

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்களிப்பு | 4,87,96,58,365.32 | 4,87,96,58,365.32 |
| பொதுமக்களிடமிருந்து பங்களிப்பு | 7,48,15,93,517.02 | 6,93,54,03,682.02 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 15,91,67,365.25 | 15,91,67,365.25 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 5,18,87,380.46 | 5,18,87,380.46 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளைவிட அதிக சொத்துக்கள் | 8,42,251.86 | 8,42,251.86 |
| உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களை விட அதிக பொறுப்புகள் | -43,69,42,738.80 | -43,69,42,738.80 |
| மூலதன ஒதுக்கீடு | 4,68,11,32,836.60 | 4,13,72,24,624.60 |
| நிலையான சொத்துக்களை புதுப்பித்தல் நிதி | 1,10,55,67,503.00 | 1,10,55,67,503.00 |
| **மொத்தம்** | **17,92,29,06,480.71** | **16,83,28,08,433.71** |

### அட்டவணை – பி – அரசு மானியம்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டம் | 1,37,37,90,000.53 | 1,37,37,90,000.53 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,51,59,00,000.00 | 3,51,59,00,000.00 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 3,10,93,55,985.00 | 3,02,51,08,485.00 |
| நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 8,93,22,04,351.00 | 8,93,22,04,351.00 |
| இதர வகைகள் | 12,10,83,83,815.00 | 11,39,89,22,686.00 |
| சென்னை பெருநகர் வளர்ச்சி தூதுக்குழு திட்டம் | 7,62,72,08,178.00 | 6,75,00,39,278.00 |
| 45 ந.ஒ.ப.ல.லி–மூ.நி.த.ச.ப | 1,71,48,80,000.00 | 36,39,40,000.00 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,90,34,07,692.00 | 1,90,34,07,692.00 |
| பொறுப்புரிமை மற்றும் நிதி | 4,51,51,44,112.00 | 3,55,92,83,828.00 |
| **மொத்தம்** | **44,80,02,74,133.53** | **40,82,25,96,320.53** |

### அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | 7,27,51,13,540.00 | 7,27,51,13,540.00 |
| நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 3,80,18,74,269.00 | 4,10,10,15,789.00 |
| **மொத்தம்** | **11,07,69,87,809.00** | **11,37,61,29,329.00** |

## அட்டவணை – டி – நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| **(I) பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை** | | |
| – இணைப்புப் பணிகளுக்கு – கழிவுநீர் | 55,75,71,683.00 | 54,62,30,204.00 |
| – பொதுப்பணிகளுக்கு | 11,40,00,32,375.21 | 10,56,89,48,788.21 |
| – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 10,42,33,482.00 | 5,52,02,426.00 |
| **(II) பிணை வைப்புத் தொகைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணம்** | | |
| **அ. நிறுத்தி வைக்கப்பட்ட பணம்** | | |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | 4,59,65,263.00 | 3,05,58,273.00 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 5,41,89,766.00 | 4,04,09,086.00 |
| **ஆ. பிணை வைப்புத் தொகைகள்** | | |
| – பணியாளர்கள் | 66,597.40 | 66,597.40 |
| – நுகர்வோர்கள் | 1,16,74,109.00 | 1,16,74,109.00 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 59,72,23,259.43 | 45,38,52,118.93 |
| – இதர வகைகள் | 1,200.00 | 1,200.00 |
| **மொத்தம்** | **12,77,09,57,735.04** | **11,70,69,42,802.54** |

## அட்டவணை – இ – நடப்பு பொறுப்புகள்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| **(அ) கடனீந்தோர்:** | | |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | 8,91,26,581.12 | 6,98,64,223.26 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 1,09,51,76,057.95 | 83,51,00,677.95 |
| – செலவுகள் | 76,46,24,615.90 | 60,18,43,780.50 |
| **முதலீடு சேர்ந்த வட்டி** | | |
| – அரசுக் கடன்களுக்கு | 8,03,54,43,196.00 | 7,43,23,09,005.00 |
| – நிதிநிறுவனக் கடன்களுக்கு | 14,11,74,141.00 | 13,94,66,960.00 |
| **(ஆ) இதர பொறுப்புகள்** | | |
| – பணியாளர்கள் | 1,45,46,84,212.61 | 1,48,43,43,100.61 |
| – மற்றவை | 1,94,92,28,928.19 | -49,36,06,119.77 |
| **மொத்தம்** | **13,52,94,57,732.77** | **10,06,93,21,627.55** |

## அட்டவணை – எப் – நிலையான சொத்துக்கள்

| விவரங்கள் | ரூபாய் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|---|
| **அ. அடக்கவிலையில் குடிநீர் வழங்கல்** | 31,91,10,89,576.83 | | |
| கழிக்க: தேய்மானம் | -14,82,62,50,544.99 | 17,08,48,39,031.84 | 17,89,75,63,612.81 |
| | | | |
| **ஆ. அடக்கவிலையில் கழிவுநீரகற்றல்** | 15,02,54,70,472.01 | | |
| கழிக்க: தேய்மானம் | -7,49,03,07,794.79 | 7,53,51,62,677.22 | 7,36,58,08,710.18 |
| | | | |
| **இ. அடக்கவிலையில் பொதுவானவை** | 88,61,93,137.83 | | |
| கழிக்க: தேய்மானம் | -63,01,90,774.67 | 25,60,02,363.16 | 26,65,42,370.17 |
| | | | |
| **ஈ. முன்னேற்றத்திலுள்ள திட்டங்கள்** | | | |
| **1. குடிநீர் வழங்கல் இதர பணிகள்** | | | |
| – வைப்புத் தொகை பணிகள் | 4,70,93,65,726.01 | | |
| – இதர பணிகள் | 19,59,53,93,874.83 | 24,30,47,59,600.84 | 22,03,79,62,759.21 |
| | | | |
| **2. கழிவுநீரகற்றல்** | | | |
| – வைப்புத் தொகை பணிகள் | 7,82,88,52,093.43 | | |
| – இதர பணிகள் | 11,92,23,20,306.37 | 19,75,11,72,399.80 | 17,35,41,77,121.74 |
| | | | |
| **3. பொதுவானவை** | | 17,05,38,001.41 | 19,10,26,829.32 |
| | | | |
| **உ. வறட்சி / வெள்ள நிவாரணப் பணிகள்** | | 1,21,13,20,630.62 | 1,10,78,50,680.82 |
| **ஊ. வறட்சி நிவாரணப் பணிகள் – பொதுவானவை** | | 23,15,21,838.34 | 22,35,12,114.34 |
| | | | |
| **மொத்தம்** | | **70,54,53,16,543.23** | **66,44,44,44,198.59** |

# அட்டவணை – ஜி – நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள் முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள்

| விவரங்கள் | ரூபாய் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|---|
| **அ. பொருட்கள்** | | 4,25,89,661.65 | 11,41,57,279.60 |
| **ஆ. கடனாளிகள்** | | | |
| 1. குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்பட்டது | 43,22,37,931.59 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -3,30,37,097.06 | 39,92,00,834.53 | 20,64,83,635.59 |
| 2. குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்படாதது | 42,60,70,092.48 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -17,92,12,951.16 | 24,68,57,141.32 | 19,17,14,809.60 |
| 3. வரிகள் | 1,81,29,43,643.93 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -10,46,53,774.66 | 1,70,82,89,869.27 | 1,51,17,36,393.69 |
| 4. பொது ஆணைக்குழுக்களிடமிருந்து வரவேண்டியவை | | 1,99,56,271.27 | 1,99,56,271.27 |
| | | | |
| 5. கட்டண கடனாளிகள் | | | |
| – அரசுக்கு ஊர்தி மூலம் குடிநீர் வழங்கல் | 13,17,28,145.26 | | |
| – கழிவுநீர் சேவை கட்டணங்கள் | 25,48,12,121.28 | | |
| – குடிநீர் இதர வகைகள் | -94,820.50 | | |
| – மேல்வரி | 22,25,63,908.45 | | |
| – அவமதிப்பு காசோலை | 5,21,624.00 | | |
| – சுத்திகரிக்கப்படாத கழிவு | 5,77,66,373.90 | 66,72,97,352.39 | 66,41,81,854.69 |
| பெறத்தக்க வாடகை | | 2,11,25,153.83 | 1,48,37,580.18 |
| மாநில சரக்கு சேவை வரி மற்றும் மத்திய சரக்கு சேவை வரி | | 9,42,87,363.38 | 0.00 |
| செ.கு.வா. பணிக்கொடை பொ. குழுமம் | | 1,20,34,006.50 | 1,20,34,006.50 |
| வரி பிடித்தங்கள் | | 3,75,81,163.93 | 3,68,24,743.70 |
| – தலைமை அலுவலக / பகுதி அலுவலக பரிமாற்றம் | | 1,39,51,49,934.00 | 2,66,81,84,880.50 |
| வசூல் கட்டுப்பாடு | | 1,10,39,267.04 | 2,63,47,011.40 |
| **இ. கையிருப்பு மற்றும் வங்கி இருப்புகள்** | | | |
| அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்புக்கணக்கு மற்றும் ரிசர்வ் வங்கி இருப்பு கணக்கு | | 72,96,17,990.58 | -2,26,23,05,709.64 |
| அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகை | | 5,76,51,55,546.00 | 4,06,48,45,571.00 |
| கையிருப்புத் தொகை | | 44,876.35 | 15,535.35 |
| பணியாளர் முன்பணம் | | 3,89,796.00 | 1,79,669.00 |

| விவரங்கள் | ரூபாய் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|---|
| **ஈ. கடன் மற்றும் முன்பணம்** | | | |
| 1. ஒப்பந்தக்காரர்கள் | | 48,26,66,886.00 | 54,30,27,797.00 |
| 2. பொருள் வழங்குபவர்கள் | | 1,63,12,405.40 | 1,21,02,404.40 |
| 3. செலவினங்களுக்கு | | 1,81,23,912.60 | 1,76,20,379.60 |
| 4. பணியாளர்கள் | | 10,47,04,706.29 | 8,19,06,053.29 |
| 5. இதர வகை | | 4,99,449.79 | 4,99,449.79 |
| **உ. வைப்புத்தொகை மற்றும் முதலீடு** | | | |
| **அ. பணியாளர்கள்** | | | |
| 1. சிறப்பு சேமநல முதலீடு | | 7,68,99,964.00 | 6,99,28,354.00 |
| 2. பொது சேமநல முதலீடு | | 84,78,07,147.34 | 77,93,15,416.34 |
| 3. ஓய்வூதிய நிதி முதலீடு | | 1,41,45,35,664.00 | 1,39,00,42,346.00 |
| 4. செபெகுவா பணியாளர் சிறப்பு மருத்துவ நலநிதி | | 1,96,54,484.00 | 1,78,39,787.00 |
| 5. விபத்து உள்ளடக்கிய முதலீடு | | 1,23,93,043.00 | 1,12,51,069.00 |
| –கூடியுள்ள வட்டி – மற்றவை | | -26,88,14,775.35 | -1,61,08,133.32 |
| –கூடியுள்ள வட்டி – ப.ஓ.தி. நிதி முதலீடு | | -89,83,487.00 | 49,06,306.78 |
| –கூடியுள்ள வட்டி – ஓய்வுதிய முதலீடு | | -26,67,67,379.73 | -13,32,05,583.09 |
| – பணிகொடை நிதி முதலீடு | | 60.00 | 0.00 |
| **ஆ. மற்றவை** | | | |
| 1. வைப்புத்தொகை | | 16,09,74,510.46 | 14,70,04,269.46 |
| 2. பொறுப்பாட்சி மற்றும் நிறுத்தி வைத்தல் முதலீடு | | 40,34,46,540.00 | 50,68,02,444.00 |
| 3. நிலையான சொத்து புதுப்பித்தல் நிதி முதலீடு | | 84,57,69,847.00 | 76,69,08,070.00 |
| **மொத்தம்** | | **15,00,98,39,205.84** | **11,46,90,33,962.68** |

## அட்டவணை – எச் – குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| அ) அளவி பொருத்தப்பட்டவை | | |
| வீட்டு உபயோகம் | 11,98,59,254.58 | 38,18,02,234.25 |
| வாணிபம் | 1,25,22,08,351.30 | 1,22,61,82,392.75 |
| நிறுவனங்கள் | 13,00,44,727.75 | 13,23,57,164.75 |
| நகராட்சிகள் | 4,81,53,733.60 | 9,20,35,763.00 |
| ஆ) அளவி பொருத்தப்படாதவை | | |
| வீட்டு உபயோகம் | 38,72,28,214.50 | 37,50,64,952.07 |
| வாணிபம் | 23,10,95,921.00 | 19,99,43,611.00 |
| நிறுவனங்கள் | 25,88,200.00 | 21,39,200.00 |
| சுத்தகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கல் | 18,86,05,906.90 | 14,95,08,142.08 |
| ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கல் | 46,33,24,135.00 | 38,21,09,406.94 |
| கழிவுநீர் கட்டணங்கள் | 22,09,21,523.44 | 28,22,67,808.15 |
| **மொத்தம்** | **3,04,40,29,968.07** | **3,22,34,10,674.99** |

## அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| குடிநீர் வரி | 37,76,43,068.82 | 35,56,31,467.24 |
| கழிவுநீரகற்றுவரி | 1,38,46,92,675.28 | 1,30,39,77,904.64 |
| **மொத்தம்** | **1,76,23,35,744.10** | **1,65,96,09,371.88** |

## அட்டவணை – ஜே – இதர வருமானம்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| விண்ணப்பம் கட்டணம்– ஆள்சேர்ப்பு | -44,12,006.03 | 1,97,91,536.94 |
| பயனற்ற பொருட்கள் விற்பனை | 6,27,907.00 | 47,31,455.00 |
| வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டி | 44,45,37,686.40 | 56,06,13,682.70 |
| இதர வட்டி | 8,93,08,624.00 | 4,05,63,507.00 |
| ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் விற்பனை | 7,93,902.13 | 35,56,700.00 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | 5,32,05,757.00 | 6,78,14,912.00 |
| ஈட்டிய ஆலோசனைக் கட்டணம் | 2,74,87,000.00 | 0.00 |
| இதர பல்வகைப்பட்ட வருமானம் | 24,15,82,142.99 | 25,75,73,920.04 |
| **மொத்தம்** | **85,31,31,013.49** | **95,46,45,713.68** |

## அட்டவணை – கே – இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| **அ. இயக்குதல் செலவுகள்** | | |
| மின்சக்தி | 1,85,50,23,751.00 | 1,76,02,80,711.00 |
| இராசாயனப் பொருட்கள் | 2,95,54,555.11 | 4,93,06,738.37 |
| எரிபொருள் மற்றும் மசகுகள் | 8,16,45,145.00 | 7,78,50,227.00 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | -2,44,93,543.00 | -2,33,55,068.00 |
| உதிரிக் கருவிகள் | 14,07,125.16 | 9,73,436.09 |
| சுமைக் கட்டணமும் காப்பீடும் | 83,605.00 | 5,233.00 |
| கழிவுநீர் ஊர்தி – வாடகைக் கட்டணம் | 1,33,93,994.00 | 1,88,21,185.00 |
| தூர் எடுப்பு | 13,21,23,741.36 | 12,52,78,868.80 |
| இதர இயக்குதல் செலவுகள் | 1,80,84,33,870.60 | 1,86,45,98,759.32 |
| **மொத்தம் – அ** | **3,89,71,72,244.23** | **3,87,37,60,090.58** |
| **ஆ. பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்** | | |
| குழாய் வழிகள், நீரேற்றும் நிலையம், தளவாடம் மற்றும் இதர உபகரணங்கள் | 95,73,33,911.69 | 73,98,37,375.95 |
| கட்டிடம் மற்றும் கட்டிடப் பணிகள் | 17,17,94,120.33 | 18,90,01,030.54 |
| வாகனங்கள் | 23,30,527.39 | 25,50,711.19 |
| இதர பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 25,88,88,166.53 | 25,87,74,339.47 |
| **மொத்தம் – ஆ** | **1,39,03,46,725.94** | **1,19,01,63,457.15** |
| | | |
| **மொத்தம் (அ + ஆ)** | **5,28,75,18,970.17** | **5,06,39,23,547.73** |

## அட்டவணை – எல் – பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| ஊதியம், கூலி மற்றும் படிகள் | 2,55,24,53,385.50 | 2,53,63,07,316.70 |
| பணியாளர் நலச் செலவுகள் | 6,79,64,540.83 | 8,24,66,220.40 |
| அயல்துறை பணியிலிருந்து வந்தவருக்குப் பங்களிப்பு | 0.00 | 16,86,176.00 |
| **மொத்தம்** | **2,62,04,17,926.33** | **2,62,04,59,713.10** |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | -62,52,70,271.36 | -60,65,80,546.00 |
| | | |
| **மொத்தம்** | **1,99,51,47,654.97** | **2,01,38,79,167.10** |

# அட்டவணை – எம் – அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள்

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| **அலுவலகச் செலவுகள்:** | | |
| வாடகை மற்றும் வரி | 1,11,50,338.00 | 81,87,395.00 |
| மின் கட்டணம் | 1,18,03,956.00 | 1,84,81,982.00 |
| கம்பியில்லாத தந்தி, தகவல் தொடர்பு செலவு | 4,21,634.00 | 7,77,670.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 93,36,985.99 | 98,57,511.24 |
| தபால் மற்றும் தந்திகள் | 69,49,302.00 | 94,21,848.00 |
| அச்சிடுதல் மற்றும் எழுது பொருட்கள் | 1,11,48,417.80 | 1,00,23,687.40 |
| பொருட்காட்சி மற்றும் விளம்பரம் | 13,79,960.00 | 12,65,192.00 |
| இதர அலுவலகச் செலவுகள் | 1,70,26,282.00 | 1,83,60,455.00 |
| பயணம் மற்றும் பயணப்படிச் செலவுகள் | 3,89,86,103.48 | 3,10,67,606.00 |
| **நிர்வாகச் செலவுகள்** | | |
| தணிக்கைக் கட்டணங்கள் | 3,91,498.00 | 1,90,000.00 |
| வழக்குகளுக்குச் செலவுகள் | 38,33,525.00 | 18,34,655.00 |
| ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் | 23,50,482.00 | 12,75,065.00 |
| வாரிய செயற்பாடு | 0.00 | 500.00 |
| வங்கிக் கட்டணம் | 1,62,28,002.11 | 25,83,919.55 |
| மதிப்பூதியம் | 1,000.00 | 0.00 |
| பிற நிர்வாகச் செலவுகள் | 52,62,914.00 | 76,39,565.00 |
| பொறுப்புறுதி ஆணையக்கணக்கு | 40,38,068.00 | 44,52,088.00 |
| **மொத்தம்** | **14,03,08,468.38** | **12,54,19,139.19** |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடு | -4,45,31,837.15 | -3,80,50,137.00 |
| | | |
| **மொத்தம்** | **9,57,76,631.23** | **8,73,69,002.19** |

## அட்டவணை – என் – முந்தைய கால சரிகட்டிய கணக்கு

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| **அ) பற்று:** | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 4,68,31,307.36 | 89,07,13,392.06 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்படாதது | 1,39,44,123.99 | 4,78,90,210.50 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்பட்டது | 34,73,598.11 | 1,85,41,692.23 |
| கழிவு நீர்க் கட்டணம் | 71,14,420.96 | 2,45,25,200.37 |
| தேய்மானம் | 8,43,92,129.54 | 73,70,411.58 |
| இதர செலவுகள் | 0.00 | 3,04,500.02 |
| **மொத்தம் – அ** | **15,57,55,579.96** | **98,93,45,406.76** |
| **ஆ) வரவு** | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 14,39,92,422.10 | 1,01,52,62,680.29 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்படாதது | 4,02,89,145.45 | 7,14,39,829.99 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்பட்டது | 1,05,86,137.74 | 1,76,84,813.38 |
| கழிவு நீர்க் கட்டணம் | 1,88,62,094.23 | 3,48,49,769.73 |
| **மொத்தம் – ஆ** | **21,37,29,799.52** | **1,13,92,37,093.39** |
| **மொத்தம் – அ–ஆ** | **-5,79,74,219.56** | **-14,98,91,686.63** |

## அட்டவணை – ஒ – கடன் மீதான வட்டி

| விவரங்கள் | 2017-18 ரூபாய் | 2016-17 ரூபாய் |
|---|---|---|
| அரசுக்கடன் வட்டி | 60,31,34,191.00 | 61,40,46,295.00 |
| தனியார் நிதி நிறுவனங்கள் வட்டி | 18,01,64,397.00 | 24,85,44,311.00 |
| **மொத்தம்** | **78,32,98,588.00** | **86,25,90,606.00** |
| கழிக்க: வட்டி முதலாக்கம் | 5,56,97,139.00 | 9,45,39,888.00 |
| **மொத்தம்** | **72,76,01,449.00** | **76,80,50,718.00** |

# அட்டவணை – பி

## குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள்

1. **கணக்குமுறைக் கோட்பாடு :**

நிதிநிலை அறிக்கை வரலாறுமிக்க அடக்கவிலை கருத்து மற்றும் நிறுவன தொடர்ச்சி அனுமானம் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. ஈட்டிய ஆதாயத்தின் அடிப்படையிலான கணக்குமுறையை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பின்பற்றுகிறது.

பொதுமக்களின் பங்களிப்பு குடிநீர் / கழிவுநீர் இணைப்புப் பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை அடுத்த நிதி ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

2. **சரக்கு மதிப்பீடு :**

பண்டக சாலையில் உள்ள பொருட்களின் அடக்கவிலை நிறையிட்ட சராசரி முறையில் கணக்கிடப்படுகிறது.

3. **இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள் :**

இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது இருப்புநிலை குறிப்பு தேதி மற்றும் நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட நாட்களுக்கு இடையே நிகழ்ந்த நிகழ்வுகள்.

4. **முந்தைய கால வகைகள் :**

நடப்பு நிதி ஆண்டில் வரவு மற்றும் செலவு கணக்கிடுகையில் முந்தைய நிதி ஆண்டின் நிதி அறிக்கையில் பிழைகள் மற்றும் விடுபட்டவைகளை முந்தைய கால சரிகட்டுதல் ஆக ஏற்றுக்கொள்ளப்படும். கணக்கியல் தேவைகளுக்கு முந்தைய கால வரவு மற்றும் செலவு கணக்குகளாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் வரவு மற்றும் செலவு தொடர்பான முந்தைய நிதி ஆண்டின் செயல்பாடுகளை இந்த ஆண்டிலும் முந்தய கால வகைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

5. **தேய்மானம் :**

அசையாச் சொத்துக்களின் தேய்மானம் ஒரே தொகை முறையில் பதிவு செய்யப்படுகின்றன, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிய தேய்மான விகிதப்படி தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தேய்மானம் வருடத்தில், செப்டம்பர் 30ம் தேதிக்கு முன் கணக்கில் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு ஒரு வருட தேய்மானமும், அக்டோபர் மாத ஆரம்பத்தில் இருந்து மார்ச் மாதம் முடிய புதியதாக சேர்த்துக்கொடள்ளப்பட்ட சொத்துக்களுக்கு அரை ஆண்டு தேய்மானமும் கணக்கிடப்படுகிறது. செயலில் உள்ள திட்டபணிகள் முடிவடைந்து உபயோகத்திலுள்ள நிறைவு அறிக்கைக்காக காத்திருக்கும் சொத்துக்களுக்கு (நேர்கோட்டு முறையில்) ஒரே தொகை முறையில் 5 சதவிகிதம் தேய்மானம் தற்காலிகமாக கணக்கிடப்படுகிறது.

6. **வருவாய் ஏற்பு :**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஈட்டிய ஆதாயத்தில் அடிப்படையிலான கணக்குமுறையை பின்பற்றுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாவிதமான வரவுகளும் செலவினங்களும் வரவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு அடிப்படையில் நடப்பு ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. பணியாளர்களின் கடனுக்கான வட்டி மற்றும் ஒய்வூதிய கால பலன்கள் ரொக்கமாக கணக்கிடப்பட்டுள்ளது.

7. **ஐயப்பாடுள்ள கடன்கள்:**

குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்தும் சில்லறைக் கடனாளிகள் ஐயப்பாடுள்ள கடன்களுக்காக, அளவுமானி உள்ளோருக்கும், அளவுமானி இல்லாதோருக்கும் முறையே 20 சதவீதம் மற்றும் 10 சதவீதமும் மற்றும் வரிகளுக்கு 10 சதவீதமும் வேறுபடும் தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. **அசையாச் சொத்து :**

அசையாச் சொத்து எனப்படுவது கொள்முதல் விலை அல்லது கட்டமைப்பு செலவிலிருந்து அசையாச் சொத்தின் மீதான தொடர் தேய்மான மதிப்பீட்டை கழிக்கப் பெருவது ஆகும். அசையா சொத்துக்கான மதிப்பு எனப்படுவது அடிப்படை செலவு மற்றும் நிறுவுவதற்காக செலவழிக்கப்படும் செலவு முதல் அதை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வரை செலவழிக்கப்படும் அனைத்து செலவுகளை உள்ளடக்கியது ஆகும். திட்டவளர்ச்சி செலவினங்கள் திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக செய்யப்படும் அனைத்து செலவினங்களையும் குறிக்கும். திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக கொடுக்கப்படும் ஊதியம், சம்பளம், மற்றும் இதரபடிகள், அலுவலக செலவுகள், நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு ஆகியவை வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ள விகிதாச்சாரத்தில் ஒதுக்கப்படுகிறது.

9. **மானியம் :**

அரசிடமிருந்து பெறப்படும் மானியம் தனியாக காண்பிக்கப்படுகிறது. இந்த வகையான மானியத்திற்காக தொகை ஏதும் திருப்பி செலுத்தப்பட்டதாக தெரியவில்லை.

10. **முதலீடுகள் :**

வாரியத்தின் முதலீடு எனப்படுவது ரொக்கமாக வங்கிகளில் செலுத்தப்படும் குறித்த கால வைப்பு தொகை. அந்த வைப்பு தொகை மீது பெறப்படும் வட்டி, வரவு மற்றும் செலவு கணக்குகளில் வரவு வைக்கப்படும். இந்த வைப்பு தொகை அல்லாத மற்ற நிதிகள் அல்லது வளர்ச்சி திட்ட முதலீடுகள் மீது பெறப்படும் வட்டி அந்த நிதி திட்ட முதலீடு கணக்கில் வரவு வைக்கப்படும்.

11. **பணியாளர்களின் ஒய்வூதிய பலன்கள் :**

பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒய்வு கால நிதி நலன்கள் ரொக்க அடிப்படியில் கணக்கடப்படுகிறது.

12. **கடன்களின் மதிப்பு :**

சொத்து வாங்குவதற்காக வாங்கும் கடன் மீதான செலவுகளையும் அந்த சொத்து மதிப்புடன் சேர்க்கப்படுகிறது.

13. **நிச்சயமற்ற பொறுப்புகள் :**

வாரியத்திற்கு எதிரான ஒவ்வொரு வழக்கும் சட்டபடியாக உண்மையான மதிப்பாய்வு செய்யப்பட்ட போதும் வாரியம் கடனாக ஏற்றுக் கொள்ளாமல் சில்லறைக் செலவினப் பொறுப்பாக வைத்துள்ளது.

14. **சரிசெய்யப்பட்ட இழப்பீடுகள் :**

சரிசெய்யப்பட்ட இழப்பீடுகள் இதர வருமானமாக கருத பட வேண்டும்.

# அட்டவணை – க்யூ

## 2018 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் மீதான குறிப்புகள்
## இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்

I. **அட்டவணை – எ – பங்களிப்பு**

1. **பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பங்களிப்பு:**

குடிநீர் / கழிவு நீர் இணைப்பு பணிகளுக்காக பொது மக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்டத் தொகை ரூ. 748.16 கோடி (சென்ற ஆண்டு –ரூ.693.54 கோடி) நடப்பு ஆண்டில் பொதுமக்களின் பங்களிப்பு கணக்கில் மாற்றப்பட்டுள்ளது.

2 **இருப்பு கடனுக்கு மிஞ்சிய சொத்துகள் :**

சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் இடைக்கால வாரியம் போன்றவற்றிலிருந்து முறையே ரூ. 15.92 கோடி, ரூ.5.19 கோடி மற்றும் ரூ.0.08 கோடி பெறப்பட்ட கடன் பொறுப்புகளுக்கும் மிகையான தொகை என குறிப்பிடப்பட்ட தொகை சென்னைக் குடிநீர் வாரியத்தில் நீண்ட காலமாக தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்த தொகைகள் அட்டவணை – எ – பங்குகள் முந்தைய ஆண்டுகளின் நடைமுறைகளின் படி காட்டப்பட்டுள்ளது.

3 **சொத்துக்களுக்கு மிஞ்சிய கடன்கள் :**

முன்னாள் 42 உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் மீதான அதிகபடியான கடன்கள், 31 மார்ச் 2018ன் நிலவரப்படி மொத்தக்கூட்டு தொகையான ரூ.43.69 கோடி (சென்ற ஆண்டு ரூ. 43.69 கோடி) முந்தைய ஆண்டுகளின் நடைமுறைகளின்படி அட்டவணை எ – பங்களிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

4 **மூலதன இருப்புகள் :**

முந்தைய ஆண்டுகளின் நடைமுறைகளின் படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வாயிலாக பெறப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணம் மற்றும் நடப்பு ஆண்டில் விண்ணப்பதாரர்கள் மூலம் பெறப்பட்ட கட்டணம் ரூ. 54.39 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 55.62 கோடி) மூலதன இருப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

5 **நிதி :**

நிலையான சொத்துக்களை புதுப்பிக்கும் நிதி ரூ. 110.56 கோடிகளை கொண்டுள்ளது. மேற்கூறிய நிதியிலிருந்து நடப்பு ஆண்டில் ரூ.84.58 கோடி முதலீடாக்கப்பட்டுள்ளது. இதில் மீதமுள்ள நிதி கடந்த ஆண்டுகளின் அசையா சொத்துக்களுடன் கூடுதலாக ஒதுக்கீடு செய்யாத நிதியாக கருதப்பட்டுள்ளது.

II. **அட்டவணை – பி– அரசு மானியங்கள் – ரூ. 4480.03 கோடி (சென்ற ஆண்டு ரூ. 4082.26 கோடி)**

சென்னை நகர குடிநீர் திட்டம் II, சென்னை நகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், நகர உள்ளாட்சி மானியங்கள் திட்டம் மற்றும் உள்ளாட்சி அமைப்பு திட்டம் போன்ற வெவ்வேறு திட்டங்களுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் தனித்தனியே கீழ்கண்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

1. **அரசு மானியம் (சென்னை நகர குடிநீர் திட்டம் II மற்றும் சென்னை நகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்) – ரூ. 488.97 கோடி (சென்ற ஆண்டு ரூ. 488.97 கோடி)**

மார்ச் 31, 2018 அன்றைய நிலவரப்படி நிலுவையிலுள்ள மீதம் இருப்பு தொகை சென்னை நகர குடிநீர் திட்டம் II 2008–09க்கு முன்பு உள்ளபடி ரூ. 137.38 கோடி என்ற தொகையாகவும் மற்றும் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்திற்கு 2009–10லிருந்து தொடர்ந்து ரூ.351.59 கோடி ஆகவும் நீடிக்கிறது.

2. **அரசு மானியம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்) –ரூ. 310.94கோடி ( சென்ற ஆண்டு ரூ. 302.51 கோடி)**

2017–18 நடப்பாண்டில், நிலத்தடி கழிவுநீர் பணிக்காகவும் மற்றும் கோயம்பேட்டிலுள்ள நாள் ஒன்றிற்கு 120 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானப் பணிக்காகவும் ரூ.8.42 கோடி மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

3. **அரசு மானியம் (நெம்மேலியிலுள்ள கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்) –ரூ. 893.22 கோடி ( சென்ற ஆண்டு – ரூ.893.22 கோடி)**

மார்ச் 31, 2018 அன்றைய நிலவரப்படி மேற்கண்ட கணக்கில் ரூ.893.22 கோடி நிலுவைத் தொகையாக உள்ளது.

4. **அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம்–மற்றவை ரூ. 1210.84 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1139.89 கோடி)**

14ம் மத்திய நிதி ஆணையம் மற்றும் செயலாக்க மானியங்கள், உட்கட்டமைப்பு வேலைகள், தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம், தேர்வாய்கண்டிகையிலிருந்து பூண்டி நீர் தேக்கம் வரை குழாய் வேய்தல் மற்றும் சென்னை ஆறுகள் புணரமைத்தல், கடன் சேவை இருப்பு நிதி மற்றும் நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் பெரூர் ஆகியவற்றிற்கு ஆலோசகர் கட்டணம் ஆகிய பணிகளுக்காக அரசிடமிருந்து ரூ. 70.95 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது.

5. **அரசு மானியம் (சென்னை பெருநகர திட்டம்) – ரூ. 762.72 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 675.04 கோடி)**

தமிழக அரசிடமிருந்து,பெரு நகர திட்டங்கள் 2013–14 மற்றும் 2015–16க்காக ரூ. 42.92கோடி நடப்பு ஆண்டில் மானியமாக பெறப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–12, 2012–13, 2013–14 மற்றும் 2015–16ம் ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு பெறப்பட்ட மானிய தொகைகள் முறையே ரூ.189 கோடி, ரூ. 390.20 கோடி, ரூ. 513.33 மற்றும் ரூ. 138.40 கோடிகளாகும்.

6. **அரசு மானியம் – நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் மூ.நி.த.ச.ப – ரூ.171.49கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 36.39 கோடி)**

கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் உள்ள நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் மூ.நி.ச.ப செயல்பாட்டிற்காக ரூ. 135.09 கோடி மானியமாக 2017–18 ஆம் ஆண்டு வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

7. **அரசு மானியம் – உள்ளாட்சி அமைப்பின் மானியங்கள் – ரூ.190.34 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 190.34 கோடி)**

உள்ளாட்சி அமைப்பின் மானியக் கணக்கில் நிலுவையில் உள்ள தொகை 2014–15 ஆம் ஆண்டிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் தேதி வரை அப்படியே உள்ளது.

8. **பொறுப்புரிமை மாற்றம் நிதி – ரூ. 451.51 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 355.93 கோடி)**

சென்னை மாநகராட்சியுடன் இணைந்து திட்டங்களை மேம்படுத்த பயன்படுத்தபடும் இந்நிதி, மாநில வரி வருவாயிலிருந்து நிலையான விகிதத்தில் பெறப்படும் மானியத்தை குறிக்கிறது.

நடப்பாண்டில் மானியமாக பெறப்பட்ட ரூ. 95.59 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 41.15 கோடி) பிப்ரவரி 2017முதல் மார்ச் 2018 வரையிலான மானியமாக கருதப்படுகிறது. பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 ஆம் மாதத்திற்கான மானியம் ரூ. 8.97 கோடி ஏப்ரல் 2017ல் பெறப்பட்டுள்ளது மற்றும் நடப்பு நிதியாண்டில் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

## III. அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்

1. **அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 727.51 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 727.51 கோடி)**

தமிழக அரசிடம் பெறப்பட்ட கடன் என்பது சென்னை திட்டம் I & II மற்றும் இதர திட்டங்களை குறிக்கிறது. இந்த கடன்களுக்கு வட்டியும் முதலும் நடப்பாண்டில் செலுத்தப்படவில்லை. 31 மார்ச் 2018ன்படி கடனின் மொத்த நிலுவை, அசல் ரூ. 616.59 கோடி வட்டி ரூ.794.65 கோடி மொத்தம் ரூ.1411.24 கோடிகளாக உள்ளது.

2. **நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 380.18கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 410.10 கோடி)**

அ) முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடமும் மற்றும் தமிழக நகர்புற உட்கட்டமைப்பு நிதியியல் சேவை நிறுவனத்திடமும் இருந்து கடன்களை பெற்றுள்ளது. இவ்விரு நிறுவனங்களிடமும் இருந்து பெறப்பட்ட கடன் ரூ.164.60 கோடி(ரூ. 129.73 கோடி மற்றும் ரூ.34.87 கோடி) 2012ம் ஆண்டிலிருந்து 2031ம் ஆண்டு வரையான காலத்திற்குண்டான கடன் தொகையை செலுத்த தமிழக அரசிடம் மானியமாக கோரப்பட்டுள்ளது.

ஆ) தமிழக நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் இருந்து வாரியத்தால் பெறப்பட்ட கடன் (சென்னை பெருநகர திட்டம், பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்) ஏப்ரல் 2016 முதல் செலுத்தப்படாமல் உள்ளது.

## IV. அட்டவணை – டி – ஒத்தி வைக்கப்பட்டள்ள வரவுகளும் வைப்பு தொகைகளும்

1. **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் இருப்புத் தொகை ரூ. 10.42 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 5.22 கோடி)**

அந்தந்த தொகுதிகளில் உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பின் மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் ரூ. 4.90 கோடி பெறப்பட்டுள்ளது.

## V. அட்டவணை – இ – நடப்பு பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

### 1. இதர பொறுப்புகள்– தொழிலாளர் பொது வைப்பு நிதி (ரூ.26.13 கோடி) (சென்ற ஆண்டு – ரூ.32.20 கோடி)

பொது வைப்பு நிதியானது பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் பங்களிப்பாகும். இது பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் முன்பணம் கொடுத்ததின் மீதி தொகையாகும்.

### 2. இதரபொறுப்புகள்– மற்றவை

கணக்குபேரேடு எண்கள் 5390 மற்றும் 5410இல் இருக்கும் இருப்பு தொகை ரூ. 0.33 கோடி வெகுகாலமாக நிலுவையிலுள்ளது.

பேரேடு எண்கள் 5360, 5311, 5315, 5370, 5451, 5452, 5480, 5550, 5600, 5630, 5650, 5660, 5760, 5810 மற்றும் 5400 ஆகிய கணக்குகளில் உள்ள கடன் நிலுவைத் தொகை ரூ.62.19 கோடி ஒத்திசைவின் கீழ் உள்ளது.

## VI. அட்டவணை – எப் – நிலையான சொத்துக்கள்

1. ரூ. 81.40 கோடி மதிப்பில் துவக்கப்பட்ட மூன்று திட்டங்கள் முறையே இரண்டாவது சென்னை மாநகர குடிநீர் திட்டப்பணி, தினப்படி 530 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டப்பணி மற்றும் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டப் பணிகள் அசையா சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றின் திட்டநிறைவு அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. நிதியாண்டு 2017–18ல் மேலேகுறிப்பிட்டுள்ள திட்டங்களில் நடைமுறை வழக்காக 5 சதவீதம் மதிப்பிழப்பாக ரூ.4.07 கோடி வழங்கபட்டது.

2. நடப்பிலுள்ள திட்டங்கள் – சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் கும்பகோணம் கழிவு நீரகற்றுப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூ. 168.63 கோடி கழிவுநீரகற்று வைப்பு பணிகளில் சேர்கிறது. இதன் மதிப்பு மதுரை ரூ. 115.73 கோடி மற்றும் கும்பகோணம் ரூ. 52.90 கோடி. இந்த தொகை மதுரை ரூ. 117.58 கோடி மற்றும் கும்பகோணம் ரூ. 52.56 கோடி வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்டது. பெரும்பாலான வேலைகளுக்கு நிறைவு சான்றிதழ் பெறப்பட்டிருந்தாலும் சிறு வேலைகள் நிலுவையில் உள்ளது. இதற்கான செலவுகளை நடப்பிலுள்ள திட்டங்களாக கருதப்பட்டுள்ளது.

3. திட்டப்பணிகளுக்கு பெறப்படும் வைப்பு நிதி அந்தந்த திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது. வைப்பு நிதி பற்றாக்குறை ஏற்படுமெனில் வாரிய நிதியிலிருந்து திட்டப்பணிக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு வட்டி விதிக்கப்படுவதில்லை. இதேப்போல் வைப்பு நிதி கூடுதலாக இருக்கும் பட்சத்தில், வாரியம் பின்பற்றும் வழக்கு முறைப்படி கூடுதல் வைப்பு நிதிகளுக்கு உண்டான வட்டியை வாரியம் தருவதில்லை.

4. ஊதியம், கூலி மற்றும் படிகள், அலுவலக செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெயின் செலவுகள் நடப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விகித விழுக்காடுகள் முறையே 23%, 30% மற்றும் 30% ஆகும்.

5. சில முன்னாள் உள்ளாட்சி அமைப்புககளைப் பொறுத்தவரை, அவற்றால் உபயோகப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் அவற்றிற்கு உரிமை இல்லாதவையாகும். இந்த சொத்துகளை பண இழப்பீட்டுடன் கூடிய உரிமை மாற்றம் செய்வதா அல்லது தற்போதைய நடைமுறையிலே தொடர்வதா என்பதை குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

6. 2017–18 வரையிலான, வறட்சி நிவாரண பணிகளுக்கான தொகை ரூ. 121.13 கோடி நிலையான சொத்துக்களில் உள்ளடங்கும். இவ்வாறான சொத்துகளுக்கு தேய்மானம் ஏதும் கருத்தில் கொள்ளப்படவில்லை. 2010–11 ஆம் ஆண்டில் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இச்சொத்துக்கள், அதனுடைய உபயோகத்தன்மையை தற்போது இழந்திருக்கும். ஆகவே அவற்றை தக்க அதிகார அமைப்பின் அனுமதியோடு தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. குடிநீர், கழிவுநீர் மற்றும் பொது வகைபாடுகளின் கீழ், முந்தைய ஆண்டுகளில் செயல்பாட்டிற்கு வந்த ரூ. 75.39 கோடி மதிப்பிலான அசையா சொத்துகள் முறையே முடிவுற்ற சான்று பெறப்பட்டு, நடப்பாண்டில் மூலதனக் கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றின் மீது ரூ.4.37 கோடி தேய்மானம் கணக்கிடப்பட்டு, அத்தொகை முந்தைய கால சரிகட்டும் கணக்கில் கணக்கிட்பட்டுள்ளது.

## VII. <u>அட்டவணை – ஜி – நடப்புச் சொத்துக்கள் , கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை</u>

### 1. <u>சரக்குகள் – ரூ. 4.26 கோடி – (சென்ற ஆண்டு – ரூ. 11.42 கோடி)</u>

அ) மார்ச் 2018அன்று, சரக்கு கையிருப்பின் வயது பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கான அறிக்கையை சம்மந்தப்பட்ட பிரிவால் சமர்பிக்க இயலவில்லை. பயனற்ற அல்லது உபயோகமில்ல சரக்குகள் கண்டறியப்பட்டு அவற்றை மாற்றுவதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆ) 2011 ஆம் ஆண்டிலிருந்து முற்றிலும் நகர்வுகள் அற்ற அல்லது இடையிடையில் நகர்வுகள் சிலவற்றை கொண்ட, பின் வரும் இரண்டு கணக்குகளின் இருப்புகளும் சரக்குகள் கணக்கில் இருப்பில் உள்ளடங்கி உள்ளன. இந்த இரு கணக்குகளின் சரிகட்டும் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.

பண்டகசாலையின் இருப்பு குறைவு (பேரேடு எண் – 8240) – ரூ.1.93 கோடி (பற்று இருப்பு)

பண்டகசாலையின் இருப்பு மிகை (பேரேடு எண் – 8230 – ரூ.1.88 கோடி (வரவு இருப்பு)

இ) சரக்கு கணக்கில் இடை வைப்புக் கணக்கு ரூபாய் 5 லட்சம் உள்ளடக்கியதாகும் (பிராந்திய அலுவலகம்–II ரூ.3.46 லட்சம் மற்றும் தலைமை அலுவலகம் ரூ. 1.54 லட்சம்).

ஈ) பொது பேரேட்டு சரக்கு கணக்கு குறியீட்டு எண்கள் 8200 முதல் 8225 வரை சரக்கு இருப்பு தொகையும், இப்பகுதிகளிலிருந்து பெறப்பட்ட சரக்கு இருப்பு சான்றிதழ்யிலுள்ள சரக்கு இருப்பு தொகையும் ஒத்துப் போகவில்லை.இக்கணக்குகளை சரிகட்டும் முறை நடப்பில் உள்ளது.

உ) சரக்கு சரிக்கட்டுதல் கணக்கில் உள்ள நிலுவை இருப்புத் தொகை பண்டகசாலை கட்டுப்பாட்டுக் கணக்கு, பண்டக சாலை இருப்பு சரிக்கட்டுதல், உள்ளே வரும் பொருட்பட்டியல் மதிப்பீடு, பொருட் பட்டியல் வள ஆதாரங்கள் ஆகியவை உள்ளடங்கியது, நிலை இருப்பை போக்குவதற்கோ / திரும்பப் பெறுவதற்கோ சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

2. **சில்லறைக் கடனாளிகள் – ரூ. 310.03 கோடி (சென்ற ஆண்டு– ரூ.264.57 கோடி)**

அ) 31 மார்ச் 2018வரை வாரியம் பின்பற்றும் கொள்கை விதிகளின்படி ஐயப்பாடுள்ள கூடுதல் ஒதுக்கீடு கடன்களுக்கு குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரிகளின் தலைப்பின் கீழ் சிறு கடனாளிகளுக்கு காப்புரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ) நடைமுறையிலுள்ள கொள்கைப்படி, கழிவுநீரகற்று சேவை கட்டணத்திற்கான சில்லறை கடனாளிகள் மீதான ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு கருதப்படவில்லை.

இ) வாரியத்தின் குழுமப் பணிக்கொடை பொறுப்பாட்சி கணக்கின் கீழ் வரும் ரூபாய் 1.20 கோடி சில்லறை கடனாளிகளில் உள்ளடங்கும்.

3. **தலைமை அலுவலக / பகுதி அலுவலக பரிவர்த்தனை – ரூ. 139.51 கோடி (சென்ற ஆண்டு– ரூ.266.82 கோடி)**

தலைமை அலுவலக/பகுதி அலுவலக பரிவர்த்தனை கணக்கில் இருக்கும் மீதமுள்ள நிலுவைத்தொகை ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

4. **வசூல் கட்டுப்பாட்டு கணக்கு ரூ. 1.10 கோடி (சென்ற ஆண்டு– ரூ.2.63 கோடி)**

வசூல் கட்டுப்பாட்டு கணிக்கில் உள்ள மீதி நிலுவை தொகை ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

5. **வங்கிகளில் உள்ள குறுகிய கால வைப்புத் தொகை ரூ. 576.52 கோடி (சென்ற ஆண்டு– ரூ.406.49 கோடி)**

31 மார்ச் 2018 தேதியிலான வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகையின் விவரங்கள் ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

6. **கடன் மற்றும் முன் பணம் ரூ. 62.23 கோடி (சென்ற ஆண்டு– ரூ.65.52 கோடி)**

**கடன் மற்றும் முன் பணம் – செலவினங்கள் – ரூ 1.81 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 1.76 கோடி)**

மேலே குறிப்பிட்டவை, தென்னக ரயில்வேக்கு முன் பணமாக கொடுக்கப்பட்டு பதினொறு வருடங்களுக்கு மேலாக நிலுவைத் தொகையாக உள்ள ரூ. 0.67 கோடிகளை உள்ளடங்கியதாகும்.

7. **வைப்புத்தொகை மற்றும் முதலீடு – ரூ. 323.69 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 354.47 கோடி**

**வைப்புத்தொகை மற்றும் முதலீடுகள் – பணியாளர்கள் / பிறர்**

அ) 31 மார்ச் 2018ல் வங்கிகளில் வைப்புத் தொகை, பொது பேரேட்டிலுள்ள நிலுவைத்தொகையும் மற்றும் நிதித் துறை பதிவேட்டிலுள்ள நிலுவை தொகையும் வேறுபடுவதால் இவை சரிபார்ப்பு மற்றும் ஒத்திசைவு செய்யப்படுகிறது.

ஆ) ஓய்வூதிய முதலீட்டு கணக்கில் (பேரேடு எண் 8523) சேர்ந்துள்ள வட்டி, 31.3.2018ம் தேதியில், ரூ.26.68 கோடி வரவு இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள் ஆராய்ந்து ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

இ) கூடியுள்ள வட்டி – மற்ற கணக்கில் (பேரேடு எண் 8520) 31 மார்ச் 2018, உள்ளபடி ரூ.26.88 கோடி வரவு இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள், ஆராய்ந்து ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

## வரவு மற்றும் செலவு கணக்கிற்கான குறிப்புகள்

### I. அட்டவணை – எச் – குடிநீர் விற்பனை மற்றும் கழிவு நீரகற்றல் கட்டணம்

**குடிநீர் விற்பனை – அளவி பொருத்தப்படாதது – வீட்டு உபயோகம் ரூ.38.72 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 37.51 கோடி)**

இந்த தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள தொகை முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தொகையை உள்ளடக்கியது, இது இப்போது வாரியத்தின் கூடுதல் பகுதி அலுவலங்கள் என்றாகியுள்ளது. ஆயினும் வாரியத்தின் ஒப்புதல்படி இக்கட்டணங்கள் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் விதிப்படியே வசூலிக்கப்படுகிறது.

### II. மானியங்கள் மற்றும் உதவித் தொகை– ரூ. 310.76 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 304.88 கோடி)

1. மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அரசிடமிருந்து பெற்ற மானியத் தொகை ரூ. 175 கோடியும் மேற்கண்டவற்றில் உள்ளடங்கிய தொகையாகும்.
2. 2011–12ம் ஆண்டு முதல் 2013–14ம் ஆண்டு வரை நெம்மேலி திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக மற்றும் மின்சாரக் கட்டணத்துக்காகவும் ரூ. 104 கோடியை வழங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. அதில் ரூ. 46.02 கோடியை நடப்பு நிதியாண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

### III. அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி

**குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி– ரூ.176.23 கோடி (சென்ற ஆண்டு ரூ. 165.96 கோடி)**

குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள தொகை, கூடுதல் பகுதிகளாக வாரியத்தில் ஐக்கியமாகியுள்ள முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் தொகையையும் உள்ளடக்கி உள்ளது.

### IV. அட்டவணை – ஜே – இதர வருமானம்

**1. வங்கியிலிருந்து பெறப்படும் வட்டி ரூ.44.45 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 56.06 கோடி)**

31.03.2018 அன்று வங்கியில் குறித்த கால உள்வைப்புத் தொகை ரூ. 576.52 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 406.48 கோடி). வைப்புத் தொகைக்கான வட்டி மார்ச் 31, 2018 முன்னரே பெறப்பட்டுள்ளது. எனவே நடப்பாண்டிற்கான சேர்ந்துள்ள வட்டி எதுவும் இல்லை.

**2. தள்ளுப்படி பெற்றது– ரூ. 1.74 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1.81 கோடி)**

மேற்குறிப்பிட்ட தொகையானது, வாரியம் தனது திட்ட பணிகளுக்கு தேவையான பொருட்கள் விற்கும் விற்பனையாளர்களுக்கு குறிப்பிட்ட கெடுநாட்களுக்கு முன்பாக பணம் செலுத்தியதால் கிடைக்கப்பெற்ற தள்ளுபடியை குறிக்கின்றது.

**3. கழிப்பொருள் விற்பனை – ரூ. 0.06 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 0.47 கோடி)**

தகுந்த அதிகாரிகளின் உத்திரவின்படி, நடப்பு ஆண்டில் உபயோகமற்ற மற்றும் வழக்கிலில்லாத பொருட்கள் கழிப்பொருளாக்கப்பட்டு ஏல விற்பனை மூலம் மேற்கூறிய தொகை வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

**V. அட்டவணை – எல் – பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்:**

**1. ஓய்வூதியம்**

சேர்திரள் ஓய்வூதிய இருப்பு (பேரேட்டு எண் – 5790) ரூ. 92.54 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 92.54 கோடி). அதில் பேரேட்டு எண். 8010 ரூ. 141.15 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 139 கோடி) தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் (பேரேட்டு எண் – 8011) ரூ.28.46 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 13.61 கோடி) பங்குத் தொகை பெறும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதிய நடைமுறை மதிப்பீடு, ஆலோசகர்களுடன் கலந்தலோசித்து, பொறுப்பை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கில் கொண்டு வரப்படும்.

**2. பணிக்கொடை**

அ) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிக்கொடை குழுமநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திலுள்ள பங்குத் தொகை வருவாய்க்கான கணக்கில் உள்ளது.

ஆ) பணிக்கொடை நடைமுறை மதிப்பீடு, ஆலோசகர்களுடன் கலந்தலோசித்து, பொறுப்பை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கில் கொண்டுவரப்படும்.

**3. விடுப்பைப் பணமாக்குதல்**

பணியாளர்கள் ஓய்வு பெறும்போது விடுப்பைப் பணமாக்கிய தொகை ரொக்க அடிப்படையில் வரவு செலவு கணக்கில் காட்டப்படுகிறது.

**VI. அட்டவணை – ஒ – கடன் சேவைக் கட்டணம் – நிதி நிறுவனங்கள்**

நடப்பாண்டில், நிதி நிறுவனங்களில் இருந்து கடன் வட்டி ரூ. 18.02 கோடி, இதில் ரூ.5.57 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**VII. வரி ஒத்திவைப்புகள்**

தொடர்ந்து ஏற்படும் இழப்புகளை கருத்தில் கொண்டு, வரிகுறைப்பாடுகள் எதிர் காலத்தில் ஏற்படாது என்பதால் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் மீது ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

1. **நிச்சயமற்ற பொறுப்புகள் –** வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 245 வழக்குகள் (உயர் நீதிமன்றம் – 206 மற்ற நீதிமன்றம் – 39) நிலுவையில் உள்ளன.
2. மூன்றாம் நபர் நிலுவைகள் ஒத்திசைவு மற்றும் உறுதி படுத்துதலுக்கு உட்பட்டவை.
3. சென்ற ஆண்டின் கணக்கு மதிப்புகள் தேவைப்படும் இடங்களில், இந்த ஆண்டின் வகைப்பாடுகளுக்கேற்ப மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். **003061S**

வாரியத்திற்காக

| | | |
|---|---|---|
| ––ஒப்பம்–– | ––ஒப்பம்–– | ––ஒப்பம்–– |
| க. முத்துக்குமாரசாமி | த.ந. ஹரிஹரன் இ.ஆ.ப., | தி.இரா. சந்திரசேகரன் |
| நிதி இயக்குநர் | நிர்வாக இயக்குநர் | கூட்டாளி |
| | | உ.எண். 018137 |
| | | த.ஆ.அ.எண் : 20018137AAAAAR5346 |

இடம் : சென்னை
நாள் : 16.11.2020

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சென்னைக் குடிநீர்) துறை

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயற்பாடுகள் பற்றிய 31. 03.2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழக அரசின் ஆய்வறிக்கை:

### அ. நிதி (ஆதாரம்) செயல்பாடுகள்

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும் , குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28, 1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

2. 31–03–2018 ஆம் தேதியில் இவ்வாரியத்தின் சொத்துகளின் மதிப்பு ரூ. 8555.52 கோடிகள் ஆகும். இதில் நிகர நிலையான சொத்துகள் ரூ. 7054.53 கோடியும், நடப்பு சொத்துகள் ரூ. 1500.98 கோடிகள் மதிப்புள்ள கடன்கள், முன்பணம் மற்றும் வைப்பீடுகள் ஆகியவைகள் அடங்கும்.

3. வாரியத்தின் பொறுப்புகள் மொத்தம் ரூ. 10010.06 கோடி ஆகும். இதில் பங்குகள் ரூ. 1792.29 கோடி, அரசு மானியம் ரூ. 4480.03 கோடி, நீண்ட கால கடன்கள் ரூ. 1107.70 கோடி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும், வைப்புத் தொகை மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூ. 2630.04 கோடி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**சென்னைக்குடிநீர் வாரியத்தின் குடிநீர் கட்டணங்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி பற்றிய வருவாய் விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தெளிவாகின்றன :**

(ரூபாய் இலட்சங்களில்)

| | 2017-18 | 2016-17 |
|---|---|---|
| **அ. குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள்** | | |
| **அளவி மானி பொருத்தப்பட்டவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 1198.59 | 3818.02 |
| வணிகத்திற்கு | 12522.08 | 12261.82 |
| நிறுவனங்களுக்கு | 1300.45 | 1323.57 |
| நகராட்சிகளுக்கு | 481.54 | 920.36 |
| **அளவி மானி பொருத்தப்படாதவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 3872.28 | 3750.65 |
| வணிகத்திற்கு | 2310.96 | 1999.44 |
| நிறுவனங்களுக்கு | 25.88 | 21.39 |
| தனியார்க்கு ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கியது | 4633.24 | 3821.09 |
| கழிவு நீரகற்று கட்டணங்கள் | 2209.22 | 2822.68 |
| இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விற்பனை | 1886.06 | 1495.08 |
| **மொத்தம் ( அ )** | **30440.30** | **32234.10** |
| **ஆ. குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி** | | |
| குடிநீர் வரி | 3776.43 | 3556.31 |
| கழிவு நீரகற்று வரி | 13846.93 | 13039.78 |
| **மொத்தம் ( ஆ )** | **17623.36** | **16596.09** |
| **மொத்தம் ( அ+ஆ )** | **48063.66** | **48830.19** |

| | 2017-18 | 2016-17 |
|---|---|---|
| இ. இதர வருமானம் | 8531.31 | 9546.46 |
| ஈ. ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | 550.00 | 63.62 |
| உ. அரசு மானியங்கள் | 31075.79 | 30488.35 |
| ஊ. முந்தைய கால சரிக்கட்டல் கணக்கு | 579.74 | 1498.92 |
| **மொத்த கூட்டுத் தொகை – (அ+ஆ+இ+ஈ.+உ+ஊ)** | **88800.50** | **90427.54** |
| ஊ. செலவினங்கள் | 105311.58 | 102445.14 |
| எ. பற்றாக்குறை | 16511.08 | 12017.60 |

2004ம் ஆண்டு முதல் குடிநீர் கட்டண வீதத்தில் மாற்றம் செய்யாத காரணத்தினாலும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவில் ஏற்றம் ஏற்பட்டதாலும் ரூ. 165.11 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது.

4. 2017–2018 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 888.00 கோடியாகும். இதில் செலவு ரூ. 1053.11 கோடி. இந்த ஆண்டில் பற்றாக்குறை ரூ. 165.11 கோடி இருக்க, சென்ற ஆண்டில் (2016–17) பற்றாக்குறை ரூ. 120.17 கோடியாகும். வாரியம் அதன் பல்வேறு நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு மொத்த வருமானம் மொத்த செலவை விட குறைவாக இருந்தாலும் அதன் பணிகளை முழு நோக்குடன் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகிறது.

5. ஒவ்வோராண்டும் குடிநீர் வழுங்க நீர் ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் அது சார்ந்த பணிகளைச் செய்வதற்கு வாரியம் பல திட்டங்களை செயல்படுத்துகிறது. ஆகவே, மொத்த வட்டியின் ஒரு பகுதியினைத் திட்டச் செலவுகளுடன் கூட்டி முதலாக்கம் செய்யப்படுகிறது. மொத்த வட்டியான ரூ. 78.32 கோடியில் நடப்பு ஆண்டில் மட்டும் ரூ. 5.57 கோடி முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. வட்டியை முதலாக்கம் செய்யப்பட்ட பின் ரூ. 72.76 கோடி வட்டியாக, 2017–18 ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு கணக்கின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் கொள்ளளவினை அதிகரித்து மேம்படுத்த வாரியம், கடல் நீரை குடிநீராக மாற்றும் இரண்டு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறது. ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கி இயக்கி, திருப்பித் தரும் திட்டம், மற்றொன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகும்.

## ஆ. <u>செயல்முறை</u>

### 1.1 புதியதாக அமைக்கப்படவுள்ள கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

புதிதாக அமைக்கப்படவுள்ள தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ நீளத்திற்கு 900 மி.மீ விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ரூ.93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுற்றன.

### 1.2 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சென்னை நகருக்கும் அத்துடன் சிறப்பு கண்ணோட்டத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை தொடங்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு :–

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011–12** | | |
| 1. | குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல் | 23.56 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2. | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 | |
| 3. | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் | 20.71 | |
| | **2012–13 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 4. | நொளம்பூர் | 18.00 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 5. | காரம்பாக்கம் | 20.56 | |
| 6. | நந்தம்பாக்கம் | 6.00 | |
| 7. | ஈஞ்சம்பாக்கம் | 22.30 | |
| 8. | சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் | 35.70 | |
| | **2013–14 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 9. | பள்ளிக்கரணை | 61.88 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 10. | முகலிவாக்கம் | 34.39 | |
| 11. | கொட்டிவாக்கம் | 23.00 | |
| 12. | பெருங்குடி | 45.00 | |
| 13. | பாலவாக்கம் | 30.00 | |
| 14. | வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கம் | 20.00 | |
| | **மொத்தம்** | **373.33** | |

## 1.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது, மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :-

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | **குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 2. | மதுரவாயல் | 23.30 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 3. | திருவொற்றியூர் | 85.11 | |
| 4. | அம்பத்தூர் | 267.08 | |
| 5. | ஆலந்தூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள் | 64.39 | |
| 6. | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 24.24 | |
| | **மொத்தம்** | **786.12** | |
| | **இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள்** | | |
| 1 | ஆவடி | 103.84 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | **மொத்தம்** | **103.84** | |

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் பின்னர் இந்திய அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டது.

## 1.4 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III (TNUDP-III)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | பம்மல் | 43.10 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2 | பல்லாவரம் | 99.95 | |
| | **மொத்தம்** | **143.05** | |

## 1.5 கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கழிவு நீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை வழங்கி வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 3529 கி.மீட்டர் நீளம் கொண்ட கழிவுநீர் அமைப்பின் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 273 கழிவுநீரேற்றும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியான சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுநீர் 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

| வ. எண். | சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) |
|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் (3 பிரிவுகள்) | 117 |
| 2 | கொடுங்கையூர் (3 பிரிவுகள்) | 270 |
| 3 | கோயம்பேடு (3 பிரிவுகள்) | 214 |
| 4 | பெருங்குடி (3 பிரிவுகள் ) | 126 |
| | மொத்தம் (12 பிரிவுகள்) | 727 |

### கட்டுமானப் பணியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண் | அமைவிடம் | சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) | திட்ட மதிப்பீடு (₹கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 31 | 26.33 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2 | சோழிங்கநல்லூர்–1 | 18 | 33.71 | |
| | மொத்தம் | 49 | 60.04 | |

வாரியம் துவங்கிய 1978 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

### கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்

| வ.எண் | விவரங்கள் | 1978ஆம் ஆண்டில் | 2017ஆம் ஆண்டில் |
|---|---|---|---|
| 1 | கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ) | 1,223 | 4250 |
| 2 | கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 250 |
| 3 | கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொறுக்கு மில்லியன் லிட்டரில்) | 57 | 764 |
| 4 | நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,14,000 | 8,15,557 |

2017–2018ஆம் ஆண்டில் 13,581 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

## 1.6 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின் கீழ் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (CMCDM)

இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 42 இணைக்கப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை திட்டங்களின் நிலவரம்

| இணைக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை | பணிகள் முடிக்கப் பட்டவை | பணிகள் நடை பெறுபவை | நடைபெற உள்ளவை<br>விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருபவை | கைவிடப் பட்டவை |
|---|---|---|---|---|
| 42 | 15 | 10 | 14 | 3 |

கூடுதலாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் 15 பகுதிகளான வளசரவாக்கம், ஆலந்தூர், மாதவரம், மீனம்பாக்கம், மதுரவாயல், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, நொளம்பூர், போரூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் மற்றும் திருவொற்றியூர் ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றுள்ளன.

இணைந்துள்ள 10 பகுதிகளான பெருங்குடி, பள்ளிக்கரணை, அம்பத்தூர், ராமாபுரம், நெற்குன்றம், முகலிவாக்கம், மணப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு மற்றும் காரம்பாக்கம் ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இடையான்சாவடி, சடையான்குப்பம், மற்றும் கடப்பாக்கம் ஆகிய 3 பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணி, குறைவான மக்கள் தொகை காரணமாக கைவிடப்பட்டு உள்ளது. 2021ல் போதுமான மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ளப்படும்.

மீதமுள்ள 14 சேர்க்கப்பட்ட பகுதிகளான நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, ஒக்கியம்–துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகியவற்றிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முடிவுற்று, உலக வங்கி நிதியுதவி கோரப்பட்டு, பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கழிவு நீரகற்று பணிகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011–12** | | |
| 1. | கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2. | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல் | 20.39 | |
| 3. | முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திறப்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | 14.08 | |
| 4. | தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவு நீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 11.24 | |
| 5. | கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல் | 31.18 | |
| 6. | ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |
| 7. | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்புப் பணிகள் | 36.55 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | **2012–13 பாதாளச் சாக்கடைத் திட்டம்** | | |
| 8. | கத்திவாக்கம் | 86.15 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 9. | சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் | 110.90 | |
| 10. | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் | 15.20 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |
| | **2013–14 பாதாளச் சாக்கடைத் திட்டம்** | | |
| 11. | திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) | 8.51 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 12. | நொளம்பூர் | 26.01 | |
| 13. | சூரப்பட்டு | 35.00 | |
| 14. | புத்தகரம் மற்றும் கதிர்வேடு | 60.00 | |
| | **மொத்தம்** | **474.37** | |

## 1.7 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது. மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு :-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | ராஜீவ் காந்தி சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | **பாதாள சாக்கடைத் திட்டம்** | | |
| 2. | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 28.08 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 3. | அம்பத்தூர் (சிப்பம் 2,3,4 மற்றும் 5) | 130.91 | |
| 4. | மதுரவாயல் | 57.45 | |
| 5. | போரூர் | 38.29 | |
| 6. | பெருங்குடி | 20.72 | |
| | **மொத்தம்** | **317.22** | |
| | **இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள்** | | |
| 7. | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 8. | திருமழிசை பேரூராட்சி | 20.47 | |
| | **மொத்தம்** | **178.52** | |

## 1.8 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III - (TNUDP-III)

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | மாதவரம் | 50.22 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2 | திருவொற்றியூர் | 67.63 | |
| 3 | அம்பத்தூர் பகுதி –I | 65.75 | |
| | **மொத்தம்** | **183.60** | |

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

# ஐந்தாண்டு நிதிநிலைச்சுருக்கம் – ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2017-18 | 2016-17 | 2015-16 | 2014-15 | 2013-14 |
|---|---|---|---|---|---|
| **அ. வருமானம்** | | | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 480.64 | 488.30 | 448.56 | 440.37 | 372.40 |
| இதர வருவாய் | 407.37 | 415.97 | 452.70 | 290.47 | 343.40 |
| **மொத்த வருவாய்** | **888.01** | **904.27** | **901.26** | **730.84** | **715.80** |
| **ஆ. செலவினம்** | | | | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 199.51 | 201.39 | 196.72 | 192.36 | 157.27 |
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 555.09 | 509.69 | 558.79 | 465.43 | 439.47 |
| வட்டி | 72.76 | 76.80 | 81.92 | 91.39 | 90.57 |
| தேய்மானம் | 139.16 | 154.68 | 166.86 | 165.59 | 146.38 |
| இதர செலவினம் | 86.59 | 81.89 | 47.41 | 93.28 | 64.84 |
| **மொத்த வருவாய் செலவினங்கள்** | **1053.11** | **1024.45** | **1051.70** | **1008.05** | **898.53** |
| **வரவை விட செலவு அதிகம் (அ-ஆ) (பற்றாக்குறை)** | **-165.11** | **-120.18** | **-150.44** | **-277.21** | **-182.73** |
| பங்குகள் | 1792.29 | 1683.28 | 1627.25 | 1570.10 | 1483.68 |
| அரசு மானியம் | 4480.03 | 4082.26 | 3566.50 | 3145.59 | 2507.97 |
| நீண்ட கால கடன்கள் | 1107.70 | 1137.61 | 1177.33 | 1219.83 | 1267.69 |
| நிலையான சொத்துக்கள் | 7054.53 | 6644.44 | 6240.63 | 5903.27 | 5452.42 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | -1129.06 | -1030.72 | -1038.80 | -986.56 | -934.69 |
| சேர்ந்த மிகை வரவு/பற்றாக்குறை | -1454.54 | -1289.43 | -1169.25 | -1018.81 | -741.60 |
| **மொத்த பணியாளர்கள்** | **2,888** | **2,811** | **3,094** | **3,234** | **3,483** |

# சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2017–18 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் சட்டமன்றப் பேரவை முன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமத்திற்கு உரிய காரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அ) | தமிழ்நாடு அரசு நிதித் துறையின் அறிவுரைப்படி நிறுவனங்கள், கணக்குகளை எந்த கால கட்டத்திற்குள் தொகுக்க வேண்டும் | 30.06.2018 |
| | ஆ) | கணக்குகள் தொகுக்கப்பட்ட தேதி | 16.11.2020 |
| | இ) | உரிய கால கட்டத்திற்குள் தொகுக்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் | ரொக்க தொகை அடிப்படையிலான கணக்கியல் கொண்ட 42 உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள், தொகை ஏற்ற அடிப்படையிலான கணக்கியல் கணக்குகளாக சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்துடன் இணைக்கப்பட்டன. மற்றும் வாரிய பகுதி அலுவலங்களின் எண்ணிக்கை 10லிருந்து 15ஆக உயர்ந்துள்ளது. முறையாக வாரியத்துடன் சேர்த்துக் கொண்டபின், 42 உள்ளாட்சி அமைப்புக்களின் சொத்துக்கள் மற்றும் கடன்பாடுகள் சரிபார்ப்பு மற்றும் மதிப்பீடு செய்ய ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டார். வாரியத்துடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புக்களின் முந்தைய கணக்குகளின் அடிப்படையில் தாக்கல் செய்ய வேண்டிய அறிக்கை ஆலோசகரால் தாமதிக்கப்பட்டது. மேலே சொன்ன காரணங்களால் நிதி ஆண்டுகள் 2011-12 மற்றும் 2012-13க்குரிய கணக்கு வழக்குகள் தாமத்தின் காரணத்தால் நிதி ஆண்டு 2013-14க்குரிய கணக்கு வழக்குகளை சமர்ப்பித்தலும் தாமதமானது. மேலே சொல்லியுள்ள காரணங்கள் தவிர்த்து நிதி ஆண்டு 2014-15க்குரிய கணக்குகள், பயன்பாட்டிலிருந்த யுனிக் மென்பொருளிலிருந்து ஆரக்கலுக்கு மாற்றியதன் காரணமாக தாமதப்பட்டது. இதன் காரணமாக 2015-16, 2016-17 மற்றும் 2017-18க்குரிய கணக்குகளை சமர்ப்பித்தலும் தாமதப்படுத்தப்பட்டது. |
| 2. | அ) | கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்கள் எப்பொழுது நியமனம் செய்யப்படவேண்டும் | இந்திய தணிக்கை துறைத் தலைவர் தணிக்கையாளர்களை சிபாரிசு செய்ததும், அதை அரசு அனுமதி கொடுத்தவுடன். |
| | ஆ) | நியமனம் செய்யப்பட்ட தேதி | 17.12.2019 |
| | இ) | உரிய காலத்திற்குள் தணிக்கையாளர் நியமனம் செய்யபடாதற்கான காரணங்கள் | முந்தய நிதி ஆண்டின் கணக்குகள் உரிய நேரத்தில் முடிக்கப்படாததால் அதை தணிக்கையாளருக்கு தணிக்கை செய்ய சமர்ப்பிக்க முடியாத காரணத்தால், நிதி ஆண்டு 2017-18 ல் தணிக்கையாளர்களை நியமனம் செய்ய காலதாமதம் ஆனது. |

| | | | |
|---|---|---|---|
| 3. | அ) | தணிக்கையாளர்கள் எந்த தேதியில் தணிக்கையை முடிக்க வேண்டும் | 31.10.2018 |
| | ஆ) | தணிக்கை முடிந்த தேதி | 16.11.2020 |
| | இ) | உரிய காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்படாததற்கான காரணங்கள் | பத்தி எண் 1(இ) மற்றும் 2(இ) குறிப்பிட்டுள்ள காரணங்களால் நிதி ஆண்டுகள் 2011–12 முதல் 2017–18 வரை கணக்காய்வுகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க இயலாமல் போனது. மேலும் நிதி ஆண்டு 2017–18க்குரிய கணக்காய்வுகள், கொரனோ வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்ட ஊரடங்கு காரணமாக கணக்காய்வாளர் வர இயலாமல் போன காரணத்தினால் தாமதமாகியுள்ளது. |
| 4. | அ) | மாநில கணக்காயர்/தணிக்கையாளர் கருத்துகள் பெறப்பட வேண்டிய தேதி | பொருந்தாது |
| | ஆ) | பெறப்பட்ட தேதி | பொருந்தாது |
| | இ) | உரிய காலத்திற்குள்முடிக்காவிட்டால் அதற்கான காரணங்கள் | பொருந்தாது |
| 5. | அ) | ஆண்டு கணக்குகள் எந்த தேதிக்குள் வாரியத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் வைக்கப்படவேண்டும் | 30.11.2018 |
| | ஆ) | எந்த தேதியில் வைக்கப்பட்டன | 28.12.2020 |
| | இ) | கால தாமதத்திற்கான காரணங்கள் என்ன | பத்தி எண் 1(இ), 2 இ) மற்றும் 3(இ)ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் குறிப்பிட்ட நேரத்திற்குள் கணக்குகள் தணிக்கை செய்வதற்கு முடியவில்லை. மேலும் கொரனோ வைரஸ் தாக்கத்தால் மற்றும் சிந்தாரிப்பேட்டையிலுள்ள தலைமை அலுவலகத்தை, எம்.ஆர்.சி நகரிலுள்ள நகர நிர்வாக அலுவலகத்துக்கு மாற்றிய காரணத்தினால் நிதி ஆண்டு 2017–18 க்கான கணக்கை, வாரிய கூட்டத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. |
| 6. | அ) | அச்சடிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய தேதி | 31.12.2018 |
| | ஆ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | பத்தி எண் 1(இ), 2 இ), 3(இ) மற்றும் 5(இ)ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் ஆண்டு அறிக்கையை அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும், தேர்தல் முடிவுகள் வெளியாகாத காரணத்தினால், ஒப்பந்த செயல்முறை தொடங்க இயலவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 7. | அ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய தேதி | 31.12.2018 |
| | ஆ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | 27.01.2021 |
| | இ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | – – |
| 8. | அ) | ஆண்டு அறிக்கையை அரசு பெற்ற தேதி | – – |
| | ஆ) | ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட காலம் | – – |
| | இ) | காலதாமாமிருப்பின் அதற்குரிய காரணங்கள் | – – |
| 9. | அ) | ஆண்டு அறிக்கை பேரவை முன் வைக்கப்பட வேண்டிய தேதி | 31.03.2019 முன்னால் |
| | ஆ) | பேரவைச் செயலகத்திருந்து அனுப்பப்பட வேண்டிய தேதி | அடுத்த கூட்டத்தொடருக்கு முன்னால் |

**சிவ் தாஸ் மீனா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**






**Chennai Metropolitan Water Supply and Sewerage Board**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

1, பம்பிங் ஸ்டேஷன் ரோடு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600 002.

1, Pumping Station Road, Chintadripet, Chennai - 600 002.

தொலைபேசி / Phone No.: 044 - 2845 1300 (20 Lines) தொலைநகலி / Fax : 0091 - 44 - 2845 8181

மின் அஞ்சல் / E-mail : cmwssb@tn.gov.in

இணையதளம் / Website : chennaimetrowater.tn.gov.in